
செந்தமிழ்ச் செல்வி



சிலம்பு-ருஅ தி. வ. ஆண்டு-உ0கச. புரட்டாசி பரல்-உ

அக்டோபர் 1983

"செந்தமிழ்ச் செல்வி"

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

உள்ளுறை

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-டு௮ திருவள்ளுவர் ஆண்டு உ0கசு, புரட்டாசி பரல்-உ

அக்டோபர் 1983

சீர்மிகு சென்னைப் பல்கலைக்கழகம்

இந்தியத் திருநாட்டுப் பல்கலைக்கழகங்களுள் சிறந்த ஒன்றெனக் கருதப்படுவதும், தமிழ்நாட்டின் உயர் கல்விக்கு ஆக்கமளித்து வருவதுமான சென்னைப் பல்கலைக்கழகம் சென்ற திங்களிறுதியில், தனது ஒரு நூற்றாண்டினைக் கடந்து மேலும் ஒரு வெள்ளி விழாவினைக் காணும் நிகழ்ச்சியினைச் சீருஞ்சிறப்புமாகக் கொண்டாடியுள்ளது.

கடந்த நூற்றிருபத்தைந்து ஆண்டுகளில் இப் பல்கலைக் கழகம் ஆற்றியுள்ள கல்விப்பணிகள் அளவிடற்கரியன. இதன் உதரத்தெழுந்து ஒன்று பலவாகி, நின்று நிலவி புகழ் பரப்பும் தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்கள் பல இருப்பினும், தாய்க் கழகமான சென்னைப் பல்கலைக்கழகத்தின் சீரிளமைத் திறம் வியந்து போற்றுமலிருக்க வியலாது.

தென்னிந்தியா மற்றும் இலங்கை உட்பட இந்தியாவின் தென் பகுதிகள் அனைத்திற்கும் ஒரே பல்கலைக் கழகமாக இற்றைக்கு நூற்றிருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றிய இப் பல்கலைக் கழகம் தனது புகழை உலகெங்கும் பரப்பியுள்ளது.

நோபல் பரிசு பெற்ற சர். சி. வி. இராமன், டாக்டர் எஸ். இராதாகிருட்டிணன் போன்ற அறிஞர் பெருமக்களை உருவாக்கிய இப் பல்கலைக்கழகத்தின் மாண்பினை உயர்த்தியவரும், இதன் சிறப்பை மேன்மேலும் வளர்த்தவரும் அறிஞர் டாக்டர் ஏ. இலக்குமணசாமி முதலியார் அவர்களாவார்கள் எனில் மிகையன்று. கால் நூற்றாண்டுக்கு மேல் இப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக இருந்து அரும்பணிகள் ஆற்றிய பெருமை அவர்கட்கே உரிய தனிப் பெருமையாகும்.

இத்தகு புகழ்மிக்க பல்கலைக்கழகத்தின் 125 ஆம் ஆண்டுவிழாவினை, இந்தியக் குடியரசுத் தலைவர், மாண்புமிகு ஜயில் சிங் அவர்கள் தொடங்கி வைத்தமை சாலப் பொருத்தமுடைத்தாகும்.

இவ் விழாவினையொட்டித் தமிழக முதல்வர் மாண்புமிகு ம. கோ. இராமச்சந்திரன் அவர்களை உள்ளிட்ட பெருமக்கள் பதினொருவர்க்கு முனைவர் (டாக்டர்) பட்டம் வழங்கிச் சிறப்பித்திருத்தல் குறிப்பிடத்தக்க செய்தியாம். (பட்டம் பெற்றோர் விவரம் பிறிதோரிடத்தில் வெளியிடப்பெற்றுள்ளது.)

மற்றுமிரு நிகழ்ச்சிகள் பாராட்டுக்குரியனவாகும். ஒன்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் கட்டுரைகள், கதைகள் மற்றுமுள்ள கருத்தோவியங்களை ஆராய்வதற்கென அண்ணா அவர்கள் பெயரில் தனித்துறை யொன்றினை நிறுவுதற்கு மாண்புமிகு முதல்வரவர்கள் தம் கட்சியின் சார்பில் பதினைந்து நூறாயிரம் உருபாக்களை வழங்கியிருத்தலாகும். இது மக்களுக்குத் தேவையானதொரு பணியாகும், ஏனெனில் அண்ணா அவர்களின் கருத்துகள் எல்லாருக்கும் எல்லாக் காலத்துக்கும் தேவைப்படுவனவேயாகும். அவர்தம் கருத்துகளில் தேவையற்றவை என ஏதும் இருப்பதற்கில்லை.

மற்றொன்று, இப் பல்கலைக்கழகத்தில், சைவ சித்தாந்தம், வைணவம், சமணம், இசுலாமியம் ஆகிய சமய ஆராய்ச்சித் துறைகள் நிறுவப்பெற்றமையாகும். இதுவும் காலத்துக்கேற்ற பணியேயாகும்.

இவ் விழாவினையொட்டி, இந்தியப் பல்கலைக் கழகங்களினின்று அறிஞர் பலர் வந்து கலந்து கொண்டு அரிய கருத்துரைகளை வழங்கியுள்ளமையும் மற்றொரு சிறப்பாகும். அத்துடன் இப் பல்கலைக் கழக நூலகத்தின் 75ஆம் ஆண்டு நிறைவினைக் குறிக்கும் பவள விழா நடைபெற்றுள்ளமையும் அதில் இந்திய நூலகத்தின் தந்தை எனப் போற்றப்பெறுபவரான டாக்டர் எஸ். ஆர். அரங்கநாதன் அவர்களின் திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டிருத்தலும் போற்றிப் பாராட்டற்குரியனவாகும்.

அடுத்து இவ் விழாவில் இடம்பெற்ற புத்தகக் காட்சிகளும் குறிப்பிடத்தக்கவை. இதில் பல கல்லூரிகள் பங்கு கொண்டமையும், அறிவியல், தொழிலியல் நூல்கள் காட்சி தந்தமையும் போற்றற்குரியன.

தமிழ்நாட்டுக் கல்வி, மற்றும் பட்ட மேற்படிப்புகட்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையிலும் புதிய விழிப்புணர்ச்சியினை உண்டு பண்ணும் வகையிலும் பல்கலைக் கழக நூற்று இருபத்தைந்தாவது ஆண்டு விழாவினை இத்துணைச் சீரும் சிறப்புமாக நடத்திய பல்கலைக் கழகப் பொறுப்பாளர் அனைவர்க்கும், சிறப்பாகத் துணைவேந்தர் டாக்டர் எம். சாந்தப்பா அவர்கட்கும் எமது பாராட்டுதல்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

டாக்டர் இராசா சர். அண்ணாமலை செட்டியார் அறக்கட்டளை பரிசளிப்பு விழா (30-9-83)



'நமது செல்வம்' என்னும் சிறந்த நூலினை எழுதிய திரு. மீ. ப. சோமசுந்தரம் (சோமு) அவர்கட்கு பரிசு ரூ. 20,000/-த்தை மாண்புமிகு. நடுவர் பி. ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்கள் வழங்குதல்.


கழகம் வ. சுப்பையா பிள்ளை அறக்கட்டளை நிறுவு விழா (6-10-83)



கழகம் வ. சுப்பையா பிள்ளை அறக்கட்டளைக்காக மாண்புமிகு. கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்களிடம் ரூ. 10,000 க்கான காசோலையினை கழக ஆட்சியர் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் வழங்குதல்.

முனைவர் கா. அப்பாத்துரையார்

எம், ஏ. (ஆங்கிலம்), எம். ஏ. (தமிழ்), விசாரத் (இந்தி), டி. லிட்.



20-9-1983 ல் நடைபெற்ற, சென்னைப் பல்கலைக் கழக
125 ஆம் ஆண்டு விழாவில்
பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்
முனைவர் (டாக்டர்) என்னும் சிறப்புப் பட்டம் வழங்கப்பெற்றார்.

முனைவர் அப்பாத்துரையார் வாழ்க !

முனைவர் பட்டம் பெறுதற்குப் பல்லாற்றானும் தகுதி வாய்ந்த பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் அவர்கள், ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் தமிழ் இலக்கிய, மொழி, வரலாற்றுத் துறை கட்கு ஆற்றிய அருந்தொண்டுகள் அளப்பில. அங்ஙனமிருந்தும், அவர்தம் ஆற்றல்களை, நுண்மாண் நுழைபுலத்தைத் தமிழகம் இது காறும் போற்றிப் புகழவேண்டிய அளவுக்குப் புகழத் தவறிவிட்ட போதிலும், அவர்தம் 76ஆம் அகவையிலேனும் சென்னைப் பல்கலைக் கழகத்தார் அப் பல்கலைக் கழகத்தின் 125ஆம் ஆண்டு விழாவில் அவருக்கு முனைவர் (டாக்டர்) பட்டம் வழங்கிச் சிறப்பித் துள்ளமை கண்டு பெரிதும் மகிழ்ந்து பாராட்டுகிறோம்.

ஓர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியராகச் சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றிய பன்மொழிப் புலவ ரவாகள் காலப்போக்கில் தமிழ்த்துறையில் ஆற்றிய பணிகள் மிகப் பல. அவை போதிய விளம்பரம் இன்மையால் கற்றவர்க் கிடையேயன்றி மற்றவர்க்குத் தெரியாத நிலையில் உள்ளன.

மொழியாக்கக் குழுவில் (Language Commission) இடம் பெற்றுச் சட்டத்துறையில் ஆற்றிய தமிழ் ஆக்கப்பணிகள் மிகப்பல. அதுபோலவே சென்னைப் பல்கலைக்கழகம் முன்னர் டாக்டர் அ. சிதம் பரநாதனாரவர்கள் தலைமையில் நிறுவிய அகராதிக் குழுவில் இடம் பெற்றார். அவ்வகராதித் தொகுப்பு உருப்பெற்றதற்கு முழுப் பொறுப் பும் திரு. அப்பாத்துரையார் அவர்களையே சாரும் எனில் மிகை யன்று.

அடுத்து இவர்கள் செய்த மிகப் பெரிய பணி திருக்குறளுக்கு, 'முப்பால் ஒளி' என்னும் இதழ் வாயிலாகப் பேருரை எழுதியமை யாகும். இப்பணி முற்றுப்பெறாதிருப்பினும், அது இதுகாறும் இவர் பல உரைகளை உற்று நோக்கி ஆராய்ந்து எழுதியுள்ள 'மணிவிளக்க உரை' என்னும் பெயரில் வெளிவந்துள்ளது. எல்லாராலும் போற்றத்தக்க ஒப்பியல் நூலாகத் (Comparative Study) திகழ் கிறது. முற்றுப் பெறாதிருக்கும் எஞ்சியுள்ள 'மணி விளக்க உரை'யும் விரைவில் வெளிவர இறையருள் கூட்டுமாக.

முனைவர் பன்மொழிப் புலவரவர்கள் நம் சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழக நூலாசிரியர்களுள் ஒருவராக மட்டுமின்றி, கழகத் தின் ஆக்கப் பணிகட்கெல்லாம் அவ்வப்போது துணைநின்ற அறிஞ ராவார். இவர்கள் கழக வெளியீட்டுக்காகத் தொகுத்தளித்த

ஆங்கிலத் தமிழ்க் கையகராதி தமிழக அரசுத் துறைகளிலும், பள்ளி, கல்லூரிகளிலும் இடம்பெற்று அரிய பயன் விளைத்து வருதலை நாடு நன்கறியும். இவர்கள் எழுதிய தமிழ் ஆக்க நூல்களும், சிறுகதைகளும் ஏராளம். அவையும் இன்றளவும் நூலகங்களிலெல்லாம் நின்று நிலவிப் புகழ் பரப்பி வருகின்றன.

அறிஞர் அப்பாத்துரையார் அவர்கள் தனித்தமிழ் இயக்கத்திற்கும், இலக்கிய உலகிற்கும் தொண்டாற்றியது போலவே அரசியல் உலகிலும் அவர்கள் ஆற்றிய தொண்டுகள் அளப்பில. இந்தியில் 'விசாரத்' பட்டம் பெற்றிருந்த போதிலும், இந்தியால் தமிழ் கெடும் என்பதறிந்து, இந்தி எதிர்ப்புப் போரிலும் முன்னணியில் நின்றார். அதனால் அவர்கள் பட்ட இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

இங்ஙனமெல்லாம் அறிவியலுக்கும் அரசியலுக்கும் தொண்டாற்றி, அத்தொண்டின் பயனாக, இந்தியப் பல்கலைக் கழகங்களுள் தலைசிறந்த ஒன்றெனக் கருதப்படும் சென்னைப் பல்கலைக்கழகத்தினால் முனைவர் பட்டம் வழங்கப்பெற்றுச் சிறப்பிக்கப்பட்டது சாலப் பொருத்தமுடைத்தாகும்.

இவ்வேளையில், பன்மொழிப் புலவரவர்களின் புகழொளி பரவுவதைக் கண்டு களிக்க மேனாள் கழக ஆட்சியர் தாமரைச் செல்வர் வ. சு. அவர்கள் இல்லாமற்போனது ஒரு பெருங் குறையே.

முனைவர் பட்டம் பெற்ற பன்மொழிப் புலவர் திரு. அப்பாத்துரையார் அவர்கட்குக் கழகத்தின் சார்பிலும் செந்தமிழ்ச் செல்வியின் சார்பிலும் எமது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

முத்தமிழால் வாழ்த்துகிறோம்

பன்மொழிகள் பயின்றாலும் பட்டங்கள் பெற்றாலும்
தன்மொழியைக் காப்பதிலே தனியார்வம் கொண்டவராம்
அண்ணாவின் வழிநின்று அறிவியக்கம் வளர்த்தவராம்
எந்நாளும் வள்ளுவத்தை ஏற்றமுறச் செய்வதற்கு
எப்போதும் எல்லாரும் ஏற்றிப் புகழுமந்த
முப்பாலுக் குரைகண்ட அப்பாத் துரையார்க்கு
'முனைவர்' எனும்பட்டம் முன்வந்து நின்றதெனில்
முற்றுமது பொருந்துமென முத்தமிழால் வாழ்த்துகிறோம்.

—நாகை வேலன்

மரபியலில் ஓர் இடைப்பாடும் இடர்ப்பாடும்

[கழக இலக்கியச் செம்மல்,
புலவர் இரா. இளங்குமரன்]

மரபுகாக்க வந்த மாண்புநூல் தொல்காப்பியம். இதனைப் பாயிரம், 'மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி' என்று சுட்டுகின்றது. தொல்காப்பிய மரபியலோ, மரபுக்காப்பின் வைப்பகம். இத்தகு மரபியலிலேயே, மரபுக் கேடுகள் செறிக்கப்பட்டுள. ஆசிரியர் நோக்கும் போக்கும் அறியார், இடையிடைச் செறித்து நடைக்கேடு புரிந்துளர்! 'மாற்றருஞ் சிறப்பின்' மரபியலிலே நூற்பா மாறிக்கிடக்கவும் நேர்ந்துள. இவற்றுள் ஒன்றனைப்பற்றியது இக் கட்டுரை.

இளமைப்பெயர் ஆண்மைப்பெயர் பெண்மைப்பெயர் என்னும் மூவகைப் பெயர்களை முறையே கூறப்புகும் ஆசிரியர், அம் முறையே முறையாய் இளமைப்பெயர் இவை இவை, இன்ன இன்னவற்றுக்கு உரியன என விரித்தார்.

''அவற்றுள், பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை'' என்றார் ஆசிரியர். பறப்பவற்றின் இளமைப்பெயர் பார்ப்பும் பிள்ளையும் என்ற ஆசிரியர், அப் பெயர்கள் தவழ்வனவற்றுக்கும் உரிமை யாதலைக் கண்டு, ''தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன'' என்றார்.

பின்னர்க், குட்டி என்னும் இளமைப்பெயரைக் கூறுவாராய், மூங்கா(கீரி), வெருகு, எலி, அணில் என்னும் நான்கும் குட்டி என்னும் இளமைப் பெயரைப் பெறும் என்றார். இந்நூற்பாவை அடுத்து, ''பறழ்எனப் படினும் உறழாண் டில்லை'' என்னும் நூற்பா இடம் பெற்றுள்ளது. இதனால், மூங்கா முதலிய நான்கும் குட்டி என்னும் பெயருடன், பறழ் என்னும் பெயரும் பெறும் என்றாகும். ஆனால் மூங்கா வெருகு எலி அணில் என்பவை 'பறழ்' என்னும் பெயர் பெற்றதற்குரிய எடுத்துக்காட்டு எதுவும் உரையாசிரியர்களுக்குக் கிட்டிற்றில்லை. "இவை இக்காலத்து வீழ்ந்தன" என்றார் பேராசிரியர். இளம்பூரணரோ மூங்காப்பறழ், வெருகுப்பறழ், எலிப் பறழ், அணிற்பறழ் என இயைத்துக் கூறினரே அன்றி, எடுத்துக் காட்டுக் காட்டினர் அல்லர்! காட்டு இருந்தால் அன்றோ காட்ட இயலும்?

பறழ் என்னும் இளமைப்பெயர் மந்திக்கு வருதலை அறிந்த பேராசிரியர், ''பறழ்எனப் படினும் உறழாண் டில்லை'' என்பதி லுள்ள ''உறழாண்டில்லை'' என்னும் மிகையால் மந்திப்பறழை எடுத்துக்காட்டி அமைத்துக்கொண்டார்.

மந்தி, பறழ் என்னும் இளமைப்பெயர் பெறுதல் பெரு வழக்காம். ''துய்த்தலை மந்தி வன்பறழ்'' (நற். 95) ''புன்றலை மந்தி வன்பறழ்'' (நற். 168) என்றும் பிறவாறும் (நற். 233, 379; குறுந். 69; ஐங்குறு 272, 273) வழங்கப்பெறுகின்றன. குரங்கின் பறழ் (ஐங். 278) கடுவன்பறழ் (குறுந். 26) என்பனவும் வழங்கு கின்றன.

இங்குக் குறித்தவற்றால், பறழ் என்னும் இளமைப்பெயர் மூங்கா முதலிய நான்கும் கொண்டதற்குச் சான்று இல்லை என்றும், மந்தி குரங்கு கடுவன் என்பவை பறழ்ப்பெயர் பெற்றதற்குச் சான்றுகள் கிட்டியும் அம் மரபு தொல்காப்பியரால் சுட்டப்பெறவில்லை என்றும் கொள்ளலாம்.

குறளனாகிய ஒருவனைப் 'பறழ்மகன்' என்கிறது கலி (94). அப் பறழ்மகன் ''ஆண்டலைக்கீன்ற பறழ்மகன்'' எனப்படுகிறான். ஆண்டலைப் பறவைக்கு அதன் பெட்டையீன்ற பறழ் போலும் மகன் என்பது இதன் பொருளாம்.

'ஈன்றாள்' என்பது தாயைக் குறித்தல் வெளிப்படை. விலங்கு குட்டிபோடுதல் 'ஈனுதல்' எனப்படுதலும் வழக்கே. ஆனால் முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கும் பறவைகளின் செயல், ஈனுதல் எனப்பெறுமோ என்னும் ஐயம் கழக நூல் அறிந்தார்க்கு எழாது. பறவை, 'ஈனில் இழைத்தல்' ஆங்குப் பயிலவழங்கும் செய்தியாதல் அறிவர். ஆகலின், பறவையின் இளமைப் பெயர்களுள் 'பறழ்' என்பதும் ஒன்று என்று கொள்வதற்கு வாய்க்கின்றது. அதே பொழுதில் பறவை பறழ்ப்பெயர் பெறுதலை ஆசிரியர் சுட்டினார் இலரே என்னும் தடையும் தலைதூக்குகிறது.

சான்றுகள் கிட்டாதவற்றுக்கு இலக்கணம் உண்மையும், சான்றுகள் கிட்டுவனவற்றுக்கு இலக்கணம் இன்மையும் ஆகிய இருதலைக் குறையும் எண்ணி, நூற்பாக்களின் வைப்பு முறையை நுண்ணிதின் நோக்கின் தெளிவு பிறக்கின்றது. இருதலைக் குறையும் போகி, இருதலை நிறையும் செறிகின்றது.

''அவற்றுள்,
பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை'' (4)

''தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன'' (5)

என்னும் நூற்பாக்களை அடுத்து,

"பறழ்எனப் படினும் உறழாண் டில்லை" (7)

என்னும் நூற்பாவைத் தொடர்புறுத்தி வைப்பின் மரபுநிலை மாறு மாண்பு தெளிவாம்.

இத் தொடர்புறுத்தலால், பறப்பவை பார்ப்பு பிள்ளை என்ப வற்றுடன் பறழ் என்னும் பெயரையும் பெறும் என்றும், தவழ் பவையும், இப் பெயர்களைப் பெறும் என்றும் கொள்ள வாய்க்கும். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல் என்னும் கொள்கையும் சிறக்கும்.

இனிப், பறழ் என்பது மந்தியின் இளமைப்பெயராகப் பயில வழங்குவதுபோல், பார்ப்பு என்னும் பறவையின் இளமைப்பெயரும் மந்திக்கு வழங்குதல் காண்பார் இயைத்துப் பார்த்து இனிது மகிழலாம். ''கருவிரல் மந்தி அருவிடர் வீழ்ந்ததன் கல்லாப் பார்ப்பிற்கு'' என்றும், ''கருவிரல் ஊகம் பார்ப்போ டிரிய'' என்றும் வருவனவற்றையும் (மலைபடு. 312-3, 208) குறுந்தொகை 249, 278, 335; ஐங்குறுநூறு 280; அகநானூறு 288 ஆகிய வற்றையும் காண்க.

பார்ப்பு என்னும் பறவையின் இளமைப்பெயரை மந்தியினம் பயில வழங்கப்பெற்றது போலவே, 'பறழ்' என்னும் பறவையின் இளமைப்பெயரையும் பயில வழங்கப்பெற்றுள்ளது என்பதையும் கருதுக.

இனிப், பறவையின் இளமைப்பெயர் மந்தியினத்தின் இளமைப்பெயர்க்கும் உரித்தாதற்கு யாதானும் ஓரியைபு இருத்தல் வேண்டும் எனின், பறவை பெரும்பாலும் கோடு வாழ்வுடையது ஆகலானும், குரங்கு 'கோடுவாழ் குரங்கு' ஆகலானும், கிளைவிட்டுக் கிளை தாவும் மந்தி பறவையெனத் தோற்றுதலுண்டாகலானும் இவ்விளமைப்பெயர் இயைந்திருக்கக் கூடும்.

ஒரு நூற்பாவின் வைப்புமுறை இடைப்பாடு எத்தகு இடர்ப் பாட்டை யெல்லாம் ஆக்கும் என்பதும், பெரும்பெரும் புலவோ ரையும் எவ்வெவ்வாறெல்லாம் வலிந்து உரை காணவும், நலிந்து கைவிடவும் ஏவும் என்பதும், நூன்முறை ஓதுங்கால், நூற்பா வைப்புமுறை நோக்குதலும் இன்றியமையாதது என்பதும் கருதிக் கடைப்பிடித்தற்கு உரியனவாம்.

இருக்கும் மரபை விடுவானேன்?
இல்லா மரபைத் தொடுவானேன்?
இருக்கும் இடத்தில் பிறழ்வாகி
இயையும் நூற்பா உறழ்வாலே!

———

பாரதியின் புதிய ஆத்திசூடியில் சமுதாய விழிப்புணர்வு

[டாக்டர். சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி.,
தமிழ்ப்பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை]

(முன் இதழ் கஎ ஆம் பக்கத் தொடர்ச்சி)

''கூற்றம் குதித்தலும் கைகூடும்; நோற்றலின், ஆற்றல் தலைப்பட் டவர்க்கு'' என்று இந்த நிலையைப் பொதுமறைப் புலவன் சுட்டினுன்! ''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'' என்று நாவுக்கரசரும், இறப்புக் கடவுளுக்கு அஞ்சாமையை எடுத் துரைப்பார்! இந்த ஞான பரம்பரையில் வந்த நம் தேசீய கவியின் உள்ளத்திலும் இந்த அஞ்சாமை வேர் கொண்டிருந்தமை வியப்பிற் குரியதன்று அன்றோ!

மாயையைப் பழித்து இந்த மாகவிஞன் எதிர்ப்புக் குரல் கொடுக் கின்ற திறம் மறக்க முடியாதது; அதுமட்டுமின்றி எதற்கும் அஞ்சாத இதயம் கொண்டோன் நம் பாரதி என்பதனையும் அது உறுதியாக்கும்; அந்த முழக்கம் இதோ:

> ''யார்க்கும் குடியல்லேன் யானென்ப தோர்ந்தனன்
> மாயையே!—உன் றன்
> போர்க்கஞ்சு வேனே! பொடியாக்குவேன் உன்னை
> மாயையே!''

ஆத்திசூடி முழுவதும் அஞ்சாமைத்திறன்:

இந்த அஞ்சாமைப் பண்பு ஆத்தி சூடியின் தொடக்கத்தில் மட்டுந்தானு துலங்குகின்றது! இல்லை! அங்கங்கு ஆத்திசூடியின் 110 மந்திரங்களுக்குள்ளே விரவி வருகிறது இந்த வீரவுணர்வு!

> ''கீழோர்க்கு அஞ்சேல்!''

என்று பண்பிற் குறைந்தோர்க்கு அஞ்சியொழுகும் கோழைமையைச் சாடுகின்றுன்!

> ''குன்றென நிமிர்ந்து நில்!''

என்று கொட்டி முழக்குகின்றுன்! குன்றம் நிமிர்ந்து நிற்பதுபோல நிமிர்ந்து நிற்க வேண்டும் என்று பாரதசமுதாயத்திற்குக் கட்டளை இடும்பொழுதே, அவனது அடங்காத உரிமை வேட்கை புலனு கின்றது அல்லவா? ''இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன என்றும், பிரிட்டிஷ் ராஜ்யமே இராமராஜ்ய மென்றும், ஆளும் சக்கரவர்த்தினிக்கு அடிபணிவதே தேசபக்தி என்றும், கோள்கை மலிந்திருந்த அக்காலத்திலும், இந்தப் பழம்

பெரும் நாட்டில் பல பெரும் மணிச்சுடர்கள் தோன்றின'' என்பர் சித்திரபாரதி நூலாசிரியர்; ஆம்; பாரதி அந்த மணிச்சுடர்க் கவிஞன் அல்லவா ? 'வறுமையினைச் சுமந்துகொண்டு, விடுதலைத் தாய் வருகைக்கு முழக்கமிட்ட பாரதி' என்பர் கவிஞர். 'சொந்த நாட்டிற் பிறர்க்கடிமை செய்து துஞ்சிடேம்' என்று சூளுரைத்துப் புறப்பட்ட புதுமைப் புலியல்லவோ இப்பெருங் கவிஞன்! அதனால் தான், கண்களில் அச்சம் மேவி உடல் வளைந்து கூனிக் குறுகிப்போன பாரத சமுதாயத்திற்கு அச்சத்தைப் போக்கி, விழிப்புணர்வை உண் டாக்கி வீரநடை பழக்குகின்றான் இம் மாகவிஞன்! இதோ ஆத்தி சூடியின் அறை கூவல்கள் சிலவற்றை—சொல்லும்போதே சுடர் முகம் தூக்கி நெஞ்சு நிமிர்த்தச் செய்யும் கொள்கை முழக்கங்களைக் கேளுங்கள் :

"கொடுமையை எதிர்த்து நில்!"
"சாவதற்கு அஞ்சேல்!"
"சிதையா நெஞ்சு கொள்!"
"சீறுவோர்ச் சீறு!"
"சூரரைப் போற்று!"
"தாழ்ந்து நடவேல்!"
"தீயோர்க்கு அஞ்சேல்!"
"தொன்மைக்கு அஞ்சேல்!"
"நெற்றி சுருக்கிடேல்!"
"நேர்படப் பேசு!"
"நையப் புடை!"
"முனையிலே முகத்து நில்!"
"ரௌத்திரம் பழகு!"
"வீரியம் பெருக்கு!"
"வெடிப்புறப் பேசு!"

தெறித்து விழும் தீப்பொறிகளாக இந்தத் தொடர்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் துள்ளி வருகின்றன! ஆன்மவீரம் செறிந்த அருட் கவிஞனாக விளங்கிய பாரதியின் இதயத்தில், பழந்தமிழ் வீரம் எவ்வாறு பொங்கித் ததும்பிற்று என்றறிவதற்கு இந்த வரிகள் எடுத்துக் காட்டுகளாகின்றன!

தவறு செய்பவரைக் கண்டால் ஒதுங்கிப் போகக் கற்றுக் கொண்டிருக்கின்றோம் இன்று நம்மிற் பலர்; வீதியிலே ஒருவன் தன் உடல்வலி காட்டி மெலியோனை வருத்திக்கொண்டிருக்கின்றான் என்று வைத்துக்கொள்ளுங்கள்! நம்மிற் பலர் நிலை என்ன?

கண்டும் காணாததுபோல் போக நினைக்கின்றோமே தவிர, அதிலே தலையிட்டு அமைதி காணத் தயங்குகின்றோம்! அநீதி என்று அறிந்தபின்னும்கூட, எதிர்த்துப் பேச இயலாத கோழைமை இன்று பலருடைய சொந்தச் சொத்தாக உள்ளது! 'வலியோர் சிலர் எளியோர்தமை வதையே புரிகுவதா?' என்று பாரதியின் சீடன் பாவேந்தனைப்போல் கேட்கும் உறுதி நம்மிற் பலர்க்குக் கிடையாது என்பது நூற்றுக்கு நூறு உண்மை. இவ்வாறு தட்டிக் கேட்பார் இல்லாமையாலேயே வன்முறைச் சக்திகள் சமுதாயத்தில் தலை விரித்தாடும் கொடுமைகள் நிகழ்கின்றன. இதற்கு மாற்று என்ன? கீழோர்க்கு அஞ்சாது கிளர்ந்திடும் மனம் வேண்டும் என்கின்றான் மாகவிஞன்! 'ரௌத்திரம் பழக வேண்டும்' என்று அறிவுறுத்துகின்றான்! "ஆறுவது சினம்" என்ற நிலை இங்குத் தலைகீழாக மாறிடக் காண்கின்றோம்! சிறுமை கண்டு பொங்கினால் தான், சிறுமைகள் மடியும் என்பது இப்பெருங் கவிஞனின் கணிப்பு! சமுதாய விழிப்பிற்குப் பாரதி காட்டும் பாடத்தில் துணிவிற்குத்தான் முதலிடம்; இதனை நாம் மறந்துவிடக் கூடாது! பாப்பாவிற்குக் கூறுவதுபோலச் சமுதாயத்திற்குக் கூறுகிற அறிவுரையை மறந்து விட முடியுமா?

"பாதகம் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா!—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!"

பக்திப் பாடலைப் பாடும்போதும், இந்த வீரப்பண்பு வெடித்து வரு கின்றது! இதோ, அவனது வீர முழக்கத்தின் மற்றொரு பகுதியைக் கேளுங்கள்:

"அச்ச மில்லை! அழுங்குதல் இல்லை!
நடுங்குதல் இல்லை! நாணுதல் இல்லை!
பாவம் இல்லை! பதுங்குதல் இல்லை!
ஏதும் நேரினும் இடர்ப்பட மாட்டோம்!
அண்டஞ் சிதறினால் அஞ்ச மாட்டோம்!
கடல் பொங்கி எழுந்தால் கலங்க மாட்டோம்!
யார்க்கும் அஞ்சோம்! எதற்கும் அஞ்சோம்!
எங்கும் அஞ்சோம்! எப்பொழுதும் அஞ்சோம்!"

நரம்புகளை முறுக்கேற்றுகின்ற உணர்வை எவ்வளவு எளிமையாகத் தன் சொல்லிழைகளில் ஏற்றுகின்றான் நம் பெருங்கவிஞன்! "வானம் துளங்கில் என்? மண் கம்பம் ஆகில் என்? மால்வரையும் தானம் துளங்கித் தலை தடுமாறில் என்? தண்கடலும் மீனம் படில் என்? விரிசுடர் வீழில் என்? வேலை நஞ்சுண்டு ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே" என்ற நாவுக்கரசரின் அரிமா முழக்கம், ஏழிலே புறப்பட்ட அந்தச் செம்மாப்பு, இருபதிலே சமூக

மக்களுக்குப் பழக்கமான தமிழிலே பொங்கிவரும் புதுமை யில்லையா, இது!

சமூக மக்களோடு உறவாடுகின்ற எளிய நடையில், எளிய தமிழில் பழக்கப்பட்ட மக்கட் கவிஞனாகிய பாரதிக்கு, தன்னுடைய உணர்வுகள் அனைத்தையும் எளிய மக்கள் மனத்திற்கு மடை மாற்றம் செய்யும் அற்புதமான சொற்றிறனும், கவித்திறனும் கை கொடுத்து உதவுகின்றன என்று கூறுவது மிகையாகாது. கவிதையில் மட்டும்தானா? வசன கவிதையிலும் இந்த ஆற்றல் வெடித்துச் சிதறுகிறது!

வசன கவிதையிலும்:

"மழை பெய்கிறது; காற்றடிக்கின்றது; இடி குமுறுகின்றது;
மின்னல் வெட்டுகின்றது.
புலவர்களே, மின்னலைப் பாடுவோம் வாருங்கள்.
மின்னல் ஒளித் தெய்வத்தின் ஒரு லீலை—ஒளித்தெய்வத்தின்
ஒரு தோற்றம்.
அதனை யவனர் வணங்கி ஒளி பெற்றனர்.
மின்னலைத் தொழுகின்றோம்.
அது நம்மறிவை ஒளியுறச் செய்க.
மேகக்குழந்தைகள் மின்னற்பூச் சொரிகின்றன.
மின்சக்தி இல்லாத இடமில்லை.
எல்லாத் தெய்வங்களும் அங்ஙனமே.
கருங்கல்லிலே, வெண்மணலிலே, பச்சை இலையிலே,
செம்மலரிலே, நீல மேகத்திலே,
காற்றிலே, வரையிலே,—எங்கும் மின்சக்தி உறங்கிக்
கிடக்கின்றது.
அதனைப் போற்றுகின்றோம்.
நமது விழிகளிலே மின்னல் பிறந்திடுக.
நமது நெஞ்சிலே மின்னல் விசிறிப் பாய்க.
நமது வலக்கையிலே மின்னல் தோன்றுக.
நமது பாட்டு மின்னலுடைத் தாகுக.
நமது வாக்கு மின்போல் அடித்திடுக.
மின் மெலியதைக் கொல்லும்;
வலியதிலே வலிமை சேர்க்கும்.
அது நம் வலிமையை வளர்த்திடுக"

என்ற வசன கவிதை, சமுதாயத்திற்கு உடனடித்தேவை; பொய்மை இருட்டைப் பொசுக்கும் மெய்ம்மைப் பேரொளி; அந்த ஒளியே அஞ்சாமையை உண்டாக்கும்; வலிமையை வளர்க்கும். அந்த வலிமையே, நாட்டு விடுதலைக்கு நம்மை ஆயத்தப்படுத்தும் என்ற பேருண்மை விளக்கமாகின்றதில்லையா? இதை ஆத்தி சூடியின் வீர வாசகம் அனைத்தும் நம் கருத்தில் கல்லெழுத்துகளாகப் பதிக்கின்றன எனலாம். (தொடரும்)

சைவமும், வைணவமும் தழைத்தோங்கும் தலைச்சங்காடு

[டாக்டர் இரா, கலைக்கோவன், எம்.பி.பி.எசு., டி.ஓ.]

(முன் இதழ் உசு ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசன் பெயர் தெரியாத இன்னொரு கல்வெட்டு, பெருந்திருக் கோயிலுடைய நாயனுர் கோயிலில் ஏற்படுத்தப்பட்ட ஒரு பூசையின் பராமரிப்புக்காகத் தலைச்சங்காட்டின் திருக்கோயில் இல்லாத சிற்றூரான சோழபாண்டிய நல்லூரில் மூன்று வேலிநிலம் ஓர் அந்தணரால் தானம் கொடுக்கப்பட்ட செய்தியைத் தெரிவிக் கின்றது. அதே சுவரிலுள்ள திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவனின் 19ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று அம் மன்னனின் ஆட்சிக்காலத்தில் நிலவிய குழப்பமான சூழ்நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. அம் மன்னனின் 5ஆவது, 11ஆவது, 15ஆவது வருடங்களில் நாடு இருந்த குழப்பமான நிலை யில் பழைய பொத்தகங்களும், கோசங்களும் தொலைந்துவிட்டமை யால், மன்னனின் 18ஆவது வருடம்வரை பிள்ளை சேந்தமங்கலம் உடையார், சிவதவனப் பெருமான் அல்லது இருங்கோளர், பிள்ளை புரோசைக்குடையார், சத்யவாக்கர் திருவேகம்பம் உடையார் ஆகியோரால் கொடுக்கப்பட்ட கிராமத்தின் பல்வேறு சிற்றூர்களில் உள்ள நிலங்கள் அனுபவித்துக் கொண்டிருந்த அனைத்துக் குடியிருப் போரின் அனுபோகப் பற்றெழுகுகளும் கிராம ஊரவையால் புதுப்பிக்கப்பட்டன என்ற செய்தி இக் கல்வெட்டால் அறியப்படு கின்றது.

இக்கல்வெட்டுச் செய்திகளின் மூலம் சோழர் அரசியல் முறை, நிர்வாகக் குழுவின் பணிகள், கோயில் நிலங்களைப்பற்றிய செய்திகள், ஊரவையின் செயல் முறைகள், மன்னர்கள் மக்கள்தம் நலன்களில் காட்டிய அக்கறை, இன்னபிற எத்தனையோ அரிய செய்திகள் தெரியவருகின்றன. மேலும் இக் கல்வெட்டுகள் மூலம் இங்குப் பல சிவாலயங்கள் இருந்தமையும் அவை இப்போது சுவடற்றுப் போய்விட்டமையும் தெரியவருகின்றது. இக் கல் வெட்டுகளில் தலைச்சங்காடு சங்காரண்யேசுவரர் ஆலயம் பெருங் கோயில் என்றும், பெருந்திருக்கோயில் என்றும் குறிக்கப் பட்டிருப்பது நினைவுகொள்ளத் தக்கது.

இங்குள்ள கல்வெட்டுகளில் மிகவும் பழமையானது உத்தம சோழனுடையதாக இருப்பதால் கி.பி. ஐந்தாம் நூற்றுண்டில்

கோச்செங்கணுனல் கட்டப்பெற்ற இக்கோயில் கி. பி. பத்தாம் நூற்ருண்டில் உத்தம சோழனுல் புதுப்பிக்கப்பட்டது என்று துணியலாம்.

இங்கு அருகில் பெருமாளுக்கான மாடக்கோயில் ஒன்று இருக்கிறது என்று கந்தசாமி குருக்கள் கூறியதும் எனக்கு மகிழ்வோடு கூடிய வியப்பு! கோச்செங்கணுன் சிவபெருமானுக்காக மட்டுமின்றித் திருமாலுக்காகவும் பல மாடக்கோயில்களை எழுப்பினுன் என்னும் ஆய்வு முடிவுக்கு இன்னெரு சான்று கிடைத்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சி அது. உடனே அங்கே புறப் பட்டோம். ஆக்கூர் வைத்தியநாத குருக்களும் எங்களுடன் வந்தார். சிவாலயத்திலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் ஊரின் மேற்குப்புறத்தில் அமைந்துள்ள அருள்மிகு நாண்மதியப் பெருமாள் கோயிலை அடைந்தோம். கோயில் பூட்டியிருந்தது. கோயிலுக்கு அருகிலேயே அறங்காவலர் சுந்தரராமானுசர் இல்லம் உள்ளது. கந்தசாமி குருக்கள் நாங்கள் வந்திருக்கும் தகவலை அவருக்குத் தெரியப்படுத்தவும் அவர் வெளிவந்து எங்களை வரவேற்ருர். உடன் பட்டாச்சாரியாரை வரவழைக்க ஆளனுப்பிய படியே, எங்களைக் கோயிலுக்கு அழைத்துச் சென்ருர்.

கோபுரமற்ற நுழைவாயிலைக் கடந்து உள்ளே நுழைந்ததும் எங்களை எதிர்கொண்டது அருள்மிகு நாண்மதியப் பெருமாளின் மாடக்கோயில். எளிய கோயிலென்ருலும் மிகப் பழமையான கோயில். மாடக்கோயிலின் வெளித்திருச்சுற்றில் தென்கிழக்கு மூலையில் மடைப்பள்ளி அமைந்துள்ளது. வாயிலையொட்டி மதிலுடன் இணைந்து ஓடுபோட்ட தாழ்வாரமொன்று வெறுமையாக உள்ளது. வடக்குப்புறத் திருச்சுற்றில் கிணறு உள்ளது. தெற்குப் புறத் திருச்சுற்றில் தாயார் கோயில் நான்கு தூண்கள் நிற்கும் கூரையில்லாச் சிறு முன்மண்டபமும், அதைவிடச் சிறிய உள் மண்டபமும், கருவறையும் கூடியதாய் அமைந்துள்ளது. இங்கு அருள்மிகு செங்கமலவல்லித் தாயார் எழுந்தருளியுள்ளார். கருவறையின் விமானம் சிறியதென்ருலும் அழகிய அமைப் புடையது. இம் மாடக்கோயிலின் நுழைவாயில் தெற்குப்புறத்தில் ஏழு படிகளுடன் அமைந்துள்ளது. வாயிலை ஒட்டிய முன்மண்டபம் காரை வேலைப்பாடு; சிறியதென்ருலும் செவ்வனே அமைக்கப் பட்டுள்ளது. இம் மண்டபத்தில் இறைவனை நோக்கிய வண்ணம் பலிபீடமும், அதற்குமுன் சிறு மண்டபத்தில் கருடனும் உள்ளன. இம் மண்டபத்தின் வடகிழக்கு மூலையில் கோயில் மணி அமைந் துள்ளதைக் கண்டோம்.

இம் முன்மண்டபத்திலிருந்து நடுமண்டபத்திற்குச் செல்ல ஐந்து படிகளுடன் கூடிய எளிய வாயில் உள்ளது. இதன் முகப்புச்

சுவரில் சங்கு, சக்கரம், திருநாமம் முதலியன வரையப்பட்டுள்ளன. இம் மண்டபத்தின் வடக்குப் பகுதியில் சிறிய மேடை போன்ற அமைப்பு உள்ளது. அதன்மீது ஆண்டாள், சேனை முதலியார், நம்மாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமங்கையாழ்வார், இராமானுசர், மணவாளமாமுனிகள் முதலியோரின் திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன. இதில் நம்மாழ்வாரும், சேனை முதலியாரும் இருந்த கோலத்திலும், மற்றவர்கள் நின்ற கோலத்திலும் உள்ளனர்.

உள்மண்டபம் மூன்று படிகளைக்கொண்ட வாயிலுடன் அமைந்துள்ளது. இதன் வடக்குப்புறம் சிறிய திண்ணையில் ஆண்டாள், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், இராமானுசர், மணவாளமுனி போன்ற பெருமக்கள் செப்புத் திருமேனியராய் எழுந்தருளியுள்ளனர். கருவறையில் மூலவராயும், உற்சவராயும் திருமால் தம் தேவியருடன் எழுந்தருளியுள்ளார். தாயாருக்கு இங்குத் தனிக்கோயில் இருந்தபோதிலும், இம் மாடக்கோயில் கருவறையிலும் தாயார் திருமாலுடன் எழுந்தருளியுள்ளது இத் தலத்தின் சிறப்பாகும்.

மூலவர் நாண்மதியப் பெருமாள், திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றவர். மூலவருக்கு இருபுறமும் நிலமகளும், திருமகளும் தேவியராய் நின்ற கோலத்தில் அருள் செய்கின்றனர். மூலவரின் திருமேனி நான்கு கைகளுடனும் கருணைபொழியும் முகத்தோற்றத்துடனும் அழகமைந்த தெய்வத் திருமேனியாய்ச் செதுக்கப்பட்டுள்ளது. ஒரு கையில் சங்கும், இன்னொரு கையில் சக்கரமும் உள்ளன. காப்பு முத்திரையுடன் வலக்கை அருள் செய்கிறது.

மூலவருக்கு முன்னால் வெண்சுடர்ப்பெருமாள் நீலாதேவியுடனும், நிலமகளுடனும் உற்சவராய் எழுந்தருளியுள்ளார். உற்சவரின் கைகளிலும் சங்கும், சக்கரமும் அமைந்துள்ளன. இடக்கையொன்று சிறிய கதாயுதத்தின்மீது ஊன்றிய நிலையில் உள்ளது. பாம்புப்படுக்கையில் படுத்தநிலையில் மிகச் சிறிய பள்ளிகொண்ட பரமனின் செப்புத் திருமேனியும், அவர்தம் தேவியரின் செப்புத் திருமேனிகளும் கலைக்கோயிலின் சிறப்புகளாகும். எல்லாச் செப்புத் திருமேனிகளுமே மிக நுணுக்கமான வேலைப்பாடுடையவை. இவற்றுள் சில சோழர் காலத்தவை. பாம்பின்மீது பள்ளிகொண்ட பரமனின் திருஉருவம் காணக் காண வியப்பையும், பக்தியுணர்வையும் ஒருங்கே உண்டாக்கவல்ல மிக அழகிய செப்புத் திருமேனியாகும்.

கருவறைச் சுவரிலுள்ள தெய்வப்புரைகள் வெறுமையாக உள்ளன. கருவறை விமானம் இரண்டு அடுக்குகளை உடையது.

இக் கோயிலின் துணைத்தளமும், தாங்குதளமும், யாளி வரிமானமும் கருங்கல் வேலைப்பாடு கொண்டவை. இவற்றில் பல கல் வெட்டுகள் காணப்படுகின்றன. திருப்பணி செய்தவர்களால் கல் வெட்டுகள் வெட்டப்பட்டுள்ள கற்கள் மாற்றியமைக்கப்பட்டும், சிதைந்த நிலையில் வைத்தும் பூசப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து செய்தியறிவது மிகக் கடினமான செயலாகும், நடுவண் அரசின் கல்வெட்டுத் துறையினர் இக் கோயிலிலிருந்து ஆறு கல்வெட்டு களைப் படியெடுத்துள்ளனர். இவை வீரபாண்டியன் தலைகொண்ட பரகேசரிவர்மன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் முதலிய மன்னர்களின் காலத்தில் வெட்டப்பட்டவையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வீரபாண்டியன் தலைகொண்ட பரகேசரிவர்மனான இரண்டாம் ஆதித்தனின் மூன்றும் ஆட்சியாண்டுக் கல்வெட்டு பாண்டிநாட்டுத் திருக்கோட்டியூரைச் சேர்ந்த பெண் ஒருத்தி இக் கோயிலுக்குச் செய்த நிலக்கொடையைப்பற்றிக் கூறுகிறது. 'திருமகள் போல' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியை உடைய முதலாம் இராசராச சோழனின் கல்வெட்டு, தலைச்சங்காடு ஊரவையினர், இராசராசன் பெயரில் பத்து அந்தணர்களுக்குத் திருச்சித்திரக்கூடத்து ஆழ்வார் கோயிலில் உணவிடுவதற்காகவும், இறைவனுக்குரிய அவிர்ப்பலி வழிபாடு முதலியவற்றை நிறைவேற்றவும் நூறு காசுகள் கொடை யளித்த செய்தியைத் தெரிவிக்கின்றது.

இந்த மன்னனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட் டொன்று மலைநாட்டைச் சேர்ந்த கொல்லம் என்ற ஊரைச் சேர்ந்த வணிகனொருவன் இக் கோயிலுக்குச் செய்த விளக்குத் தானத்தை எடுத்துரைக்கிறது.

அரசன் பெயர் தெரிந்துகொள்ள முடியாத கல்வெட் டொன்றினால் மருகல்நாட்டில் உள்ள பிரம்மதேயமான இடை யாற்றுக் குடியைச் சேர்ந்த ஒருவர் தலைச்சங்காட்டிலுள்ள திரு மதுரை ஆதிவராகக் கோயிலுக்கு நிலமளித்த செய்தி தெரிய வருகிறது.

முதலாம் இராசேந்திர சோழனின் 'திரு மன்னிவளர' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியுடன் உள்ள கல்வெட்டு, கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள வீரசோழ மாடிகை என்னும் ஊரைச் சேர்ந்த வணிகனொருவனிடமிருந்து திருவாய்ப்பாடி ஆழ்வார் கோயிலுக்காகப் பெற்றுக்கொண்ட நானூறு கழஞ்சு பொன்னுக்கான வருடாந்திர வட்டியான நூற்றைம்பது கழஞ்சுக்கு மாற்றாக, ஊரவை சில கோயில் நிலங்களின் வரிகளைக் குறைத்தது என்ற செய்தியைக் கூறுகிறது.

இங்குள்ள கல்வெட்டுகளில் பழமையானது வீரபாண்டியன் தலைகொண்ட பரகேசரிவர்மனான இரண்டாம் ஆதித்த சோழனு டையதாகும். இதன் அடிப்படையில் இக்கோயில் இரண்டாம் பராந்தகனான சுந்தரசோழன் காலத்தில் கருங்கல் திருப்பணியாக மாற்றப்பட்டிருக்கலாம் என்று துணியலாம். அருகருகே அமைந் துள்ள இரண்டு கோயில்களும் (தலைச்சங்காடு சிவன் கோயில், பெருமாள் கோயில்) அடுத்தடுத்து வந்த மன்னர்களால் கருங்கல் திருப்பணிகளாக மாற்றப்பட்டிருப்பது இயல்பானதே. பழமையும், பெருமையும் மிக்க இரண்டு ஆலயங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் தலைச்சங்காடு வைணவமும், சைவமும் வேறுபாடின்றித் தழைத்தோங்கும் சமயத் தொட்டிலாகும்.

சென்னைப் பல்கலைக்கழக 125ஆம் ஆண்டு விழா

சென்னைப் பல்கலைக் கழகத்தின் 125ஆம் ஆண்டு விழா 20—9—83ல், சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்ட பத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு ஜயில்சிங் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இவ் விழாவில் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு ம. கோ. இராமச் சந்திரன் அவர்கட்குப் பல்கலைக்கழகத்தின் சார்பில் சிறப்பு முனைவர் (டாக்டர்) பட்டம் வழங்கப்பெற்றது. அத்துடன் மற்றும் பதின்ம ருக்கு முனைவர் பட்டம் வழங்கப்பட்டது. அவர்கள் முறையே இராசசர் முத்தைய செட்டியார், நடுவணரசு பாதுகாப்புத்துறை அமைச்சர் ஆர். வெங்கட்ராமன், முன்னாள்அமைச்சர் சி. சுப்பிர மணியம், சி. சந்திரசேகர், இராஜாராமண்ணா, நெ. து. சுந்தரவடி வேலு, டி. சி. கோத்தாரி, பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், சரவணமுத்து, டாக்டர் தம்பையா, சீர்காழி கோவிந்தராசன், ஆகியோர் ஆவர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரால் ஒரு புதிய துறையினை நிறுவ வேண்டுமெனவும், அதில் அண்ணா அவர்களின் பேச்சுகள், கட்டுரைகள், கதைகள், அவர் வெளியிட்ட கருத்துகள் ஆகிய வற்றை ஆராயவேண்டுமெனவும், அதற்காக அ. தி. மு. க. சார்பில் 15 நூறாயிரம் ரூபா கொடுப்பதாகவும் மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். தெரிவித்தார். கல்வி அமைச்சர் மாண்புமிகு அரங்க நாயகம் விழாமலரை வெளியிட்டார். குடியரசுத் தலைவர் ஜயில்சிங் அவர்கட்குக் கேடயம் ஒன்றினையும் வழங்கினர். சிறப்பாகப் பணி யாற்றி வரும் பல்கலைக்கழகப் பணியாளர்கட்கு டாக்டர் முத்தைய செட்டியாரவர்கள் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினர். அமைச்சர்கள் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன், மின்துறை அமைச்சர் இராமச்சந்திரன், இராகவானந்தம், கே. ஏ. கிருட்டிண சாமி, மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம், சட்டமன்றத் தலைவர் இராசாராம் மற்றும் நீதிபதிகள், பல்வேறு மாநிலத் துணை வேந்தர்கள் ஆகியோரும் இவ் விழாவில் கலந்துகொண்டனர்.

அரையமும், இத்தியும், அதவமும்

[பி. எல். சாமி, இ. ஆ. ப.]

அரையம்: சங்கநூலில் அரையம் என்ற ஒரு மரம் ஒரு செய்யுளில் மட்டும் சொல்லப்பட்டுள்ளது.

"வேனி லரையத் திலையொலி வெரீஇப்
போகில் புகாவுண்ணுது பிறிதுபுலம் படரும்
வெம்பலை யருஞ்சுர நலியா
தெம்வெங் காதலி பண்புதுணைப் பெற்றே" —ஐங். 325-1

அரையம் என்பது அரசமரத்தைக் குறிப்பதாகும். வேனிற்காலத்தில் காற்றில் அரையத்தின் இலை ஒலிக்கும் ஓசைக்கு அஞ்சி, போகில் என்ற பறவை அரையத்தின் பழத்தை உண்ணுது வேறிடத்திற்குச் செல்வதுபற்றி ஐங்குறுநூற்றில் கூறப்பட்டுள்ளது. சிறு காற்றடித்தாலும் இம் மரத்தின் இலைகள் நிறைய ஓசையைத் தரும் என்று செடிநூலில் சொல்லப்பட்டுள்ளது. இலைகளின் நுனி வால் போன்று நீண்டு இருக்கும். (leaves long, caudate which produce a peculiar and characteristic rustling sound when the wind blows) ஐங்குறுநூறு கூறுவதைப் போலவே செடி நூலும் (Botany) கூறுவதைக் காணலாம். இந்த மரத்தை அஸ்வதம் என்று வடமொழியில் கூறுவர். தமிழில் அரசமரம் என்று இக்காலத்தில் அழைக்கப்படுகின்றது. மலையாளமொழியில் அரையால் என்பது அரசமரத்தையே குறிக்கும். ஆலமரத்தின் இனமான மரங்களைப் பெரியால், அரையால், இத்தியால், அத்தியால் என்ற பெயர்களால் அழைப்பது மலையாளத்தில் உள்ள அரிய பேச்சு வழக்குகளாகும். இம் மரமே பௌத்தர்களின் போதிமரமாகும். இந்த மரத்தைப்பற்றிப் புறநானூற்றில் மறைமுகமான குறிப்பு ஒன்றும் உள்ளது.

"வென்றி நிலைஇய விழுப்புக ழொன்றி
இருபாற் பெயரிய வுருகெழு மூதூர்க்
கோடிபல வடுக்கிய பொருணுமக் குதவிய
நீடுநிலை யரையத்துக் கேடுங் கேளினி
நுந்தை தாய நிறைவுற வெய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்" —புறநானூறு 202-8

நீடுநிலையரையம் என்பது ஒரு பழைய ஊரைக் குறித்ததாகும். அவ்வூரின் பெயர் நெடிய அரசமரத்தின் பெயரால் நீடுநிலையரையம் என்று வழங்கப்பட்டுள்ளதை உணரலாம்.

"பனையும், அரையும், ஆவிரைக் கிளவியும்
நினையுங் காலை அம்மொடு சிவணும்
ஐயென் இறுதி அரைவரைந்து கெடுமே
மெய்அவண் ஒழிய என்மனார் புலவர்"
—தொல். எழுத்து 283

தொல்காப்பியச் சூத்திரத்திலும் அரசமரத்தை அரை என்று குறிப்பிடுவதைக் காணலாம். அரைய மரத்தை Ficus religiosa என்று அறிவியலில் அழைப்பர்.

இத்தி: ஆலமரம், அரசமரம் ஆகியவற்றின் இனமான மற்றொரு மரம் இத்தியாகும்.

"தறுக ணாளர் குடர்தரீஇத் தெறுவரச்
செஞ்செவி எருவை யஞ்சுவர இகுக்குங்
கல்லதர்க் கவலை போகின் சீறூர்ப்
புல்லரை யித்திப் புகர்படு நீழல்
எல்வளி யலைக்கும் இருள்கூர் மாலை" —அகம். 77-13

அகநானூற்றில் புல்லிய அரையுடைய இத்தி கூறப்பட்டுள்ளது. இத்தி மரத்திற்குக் குறிய விழுதுகள் உண்டு. ஆலமரத்தைப் போன்று நீண்ட விழுதுகள் இல்லை. இதன் விழுதுகள் நீண்டு வளர்ந்து தரையில் ஊன்றுவதில்லை. இத்திமரத்தை இக்காலத்தில் இச்சி என்று அழைக்கின்றனர். சேந்தன்திவாகரத்தில் இத்தியின் பெயர் இரத்தி, இல்லி என்று கூறப்பட்டுள்ளது. சூடாமணி நிகண்டில் இத்தியின் பெயர்களாக சுவி, இரத்திரி, இறலி என்பன கூறப்பட்டுள்ளன. பிங்கலந்தை நிகண்டில் இறலி என்பதற்கு இத்தி, இறலி என்றும் பொருள் கூறப்பட்டுள்ளது.

சங்கநூல்களில் இத்தி மரத்தைக் கல்லிச்சி என்றழைப்பர். கற்பாங்கான (dry and rocky places) இடங்களில் வளர்வதால் இப்பெயர் வழங்கிற்று. மலையாளத்தில் இம் மரத்தைக் கல்ஆல், கல்இச்சி என்றும் அழைப்பர். பிற்காலத்தில் சிவனுக்குரிய மரமாகக் கல்லாலமரம் கருதப்பட்டதாகும். நன்னூல் மயிலைநாதர் உரையில் வீழ் என்பது ஆல், இறலி, தாழை, சீந்தில்கட்குரிய தென்று சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம். இவ்வுரையில் கூறப்பட்ட இறலி இத்தியாகும். இத்தியின் விழுதை growing out small aerial roots என்று அறிவியலில் குறிப்பிடுவர். இத்தியை Ficus retusa என்று செடிநூலில் அழைப்பர். தமிழில் கல்லிச்சி என்றும் மலையாளத்தில் கல்லித்தி, இத்தி, இத்தியால் என்றும் வழங்குவர்.

அத்தி: சங்கநூல்களில் அதவம் என்ற மரம் இரு பாடல்களில் கூறப்பட்டுள்ளது.

"கழைபாடு இரங்கப் பல்லியங் கறங்க
ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன்கயிற்று
அதவத் தீங்கனி அன்ன செம்முகத்
துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்கக்......" —நற். 95-3

"கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
ஆற்றயல் எழுந்த வெண்கோட் டதவத்
தெழுகுளிறு மிதித்த ஒருபழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
காதலர் அகலக் கல்லென் றவ்வே......" —குறுந். 24-3

அதவமரத்தின் கிளைகள் வெண்மையாக இருப்பதாகக் குறுந்தொகை கூறுவது பொருத்தமேயாகும். இது ஆற்றயலில் எழுந்தது என்று கூறியதும் சரியானதே. இதன் கனிகள் சிவந்த முகத்தையுடைய மந்தியின் நிறத்தோடு ஒத்திருந்தது என்று நற்றிணையில் கூறப்பட்டதும் மிகப்பொருத்தமானதாகும். இந்தக் குரங்குதான் தமிழ் நாட்டில் மிகவும் காணப்படுவதாகும். விளையாட்டுக்காக வளர்க்கப்படுவதாகும். இதன் கனி சிறிது மங்கலான சிவந்த நிறமுடையதெனக் (dull reddish) கூறுவர். இம் மரத்தினுடைய ஒரு கனியை ஏழு குளிறுகளான நண்டுகள் மிதித்துக் குழைந்ததுபோல என்ற உவமை கூறப்பட்டுள்ளதைக் காணலாம். ஏழு குளிறு என்ற இடத்தில் ஏழுகளிறு என்ற பாடமாற்றமும் உண்டு. அதவம் என்பதையே தற்காலத்தில் அத்தி என்று வழங்குகின்றனர். மலையாளத்தில் அத்தியால் என்று வழங்குவர். அத்தியைச் செடி நூலில் Ficus glomeratta என்று அழைப்பர்.

துணிந்துவிட்டால்...?

[நல்லரர்க்கினியன்]

இலங்கைவாழ் தமிழரின் இன்னல் களைவதற்கு
இங்கிருந்து குரல்கொடுத்தால் ஏதம் விளையுமென்பார்
அங்கங்கே நடப்பவெல்லாம் அந்நாட்டுச் சிக்கலென்பார்
இங்குள்ள ஏடுகளும் ஏற்றபடி பாட்டிசைக்கும்
இந்நிலையில் அங்கே இறந்தொழிவார்க் கெல்லை இல்லை
எஞ்சியுள்ள தமிழர்களும் "இருப்பதிலும் இறப்பதுமேல்"
என்றெண்ணித் துணிந்துவிட்டால் என்னாகும் என்பதனைப்
பன்னாட்டு அரசுகளும் பகுத்தறிதல் நன்றாகும்!

மிடற்றொலியியல்

[முனைவர் வீ. ப. கா. சுந்தரம், மதுரை.]

1 : 1. மிடற்று ஒலியியல் என்பது என்ன?

மிடறு என்பது கழுத்து, காற்றுக்குழாய், தொண்டை எனப் பொருள்படும். குரல்வளையிலே காற்று இயங்கும்போது ஒலி பிறந்து, வாய், மூக்கு, பல், உதடு முதலிய உறுப்புகளின்மீது தாக்குவதால் ஒலி வேறுவேறு தன்மையடைகின்றது. எனவே குரல் பெட்டகத்தின் அமைப்பு, ஒலி உண்டாக்கும் உறுப்புகள் காற்றை எழுப்புமுறைகள், காற்றுக் குழாய் அமைப்பு, குரல் பயிற்சி நெறிகள் முறைகள், நாக்கு, மூக்கு, உதடு, பல், அண்ணம் இவற்றால் ஒலி மாற்றப்பெறும் வகைகள்—இத்துறைகளைப்பற்றி யெல்லாம் விளக்குவதே 'மிடற்றொலியியல்' எனப்படுகிறது. தமிழ் மொழியில் மிடற்றொலிப் பயிற்சி முறைகள்பற்றிய பல நூல்கள் நல்லமுறையில் இன்னும் வெளிவரவில்லை. பண்டை இலக்கியங் களில் ஆங்காங்கு மிடற்றொலிபற்றிய குறிப்புகள் பல்வேறு இடங் களில் சிதறிக்கிடக்கின்றன. அவற்றைத் திரட்டி விளக்குவதே இக்கட்டுரையின் சிறப்பு நோக்கம்.

1 : 2. மிடறு எனும் சொல் அமைப்பு :

மிழற்றுதல்—இனிது சொல்லுதல், இயம்புதல். 'மிழறு' எனும் சொல் 'மிடறு' என ஆகியது என்று சென்னைப் பல்கலைக் கழக அகராதி கூறுவது பொருந்துவதே.

2. மிடற்றொலிபற்றிக் கூறும் தமிழ் இலக்கியங்கள் :

மிடற்றினின்றும் எழும் இசைக்குரிய ஒலிகளை—நல்லொலிகள் எனல் பொருந்தும்; இசைக்குரியன அல்லாத ஒலிகளை 'அல்லொலிகள்' எனல் பொருந்தும். நல்லொலிகளையும் அல்லொலி களையும்பற்றிய பல்வேறு குறிப்புகளைப் பண்டைப் புலவர்கள் கூறியுள்ளனர்; அக்குறிப்புகள் காணப்படும் நூல்கள் :—கல்லாடம், சீவகசிந்தாமணி, பஞ்சமரபு, திருவிளையாடற்புராணம் முதலியன. ஒலியிலக்கணம்பற்றிய ஆழமான குறிப்புகள் சிலப்பதிகாரத்திலும், அதன் அரிய இருபெரும் உரைகளிலும் காணப்படுகின்றன. பின்னர் இவற்றைத் தனிக்கட்டுரையில் அறிவோம்.

3. மிடறு ஓர் வியப்புமிக்க இசைக்கருவி:

ஒத்திசைப் பெட்டியில் (ஆர்மோனியம்) ஏழிசை ஒலிகள் எழும்புகின்றன. குரல்வளைப் பெட்டகத்தில் ஏழிசை ஒலிகளும்

அவற்றுடனே சொற்களின் ஒலிப்புகளும் எழுகின்றன. பிற கருவிகளில் காற்று உட்புகும்வழி ஒன்று; வெளிச்செல்லும் வழி வேறென்று என இரு வழிகள் உண்டு. ஆனால், மிடற்றுக் கருவியிலே காற்று உட்புகுதலும் வெளிவருதலும் ஒரே ஒரு வழியில்தான். இசைக்கருவிகள் எல்லாம் மாந்தனின் படைப்பே; மிடற்றுக் கருவியோ இறைவனின் படைப்பு. (இசைக்கருவிகளைக் கடவுள் படைத்தார் என்று நிறையப் புராணக் கதைகள் உண்டு. இவற்றைச் சில ஆங்கில நூல்கள் விரிவாக எழுதித் தமிழர்கள் கருவிகண்டுபிடிக்கும் அறிவாற்றல் அற்றவர்கள் என்று சுட்டுகின்றன) ''பெரிய ஒத்திசைப் பெட்டகத்திலே (ஆர்கன்) காற்றுட் செலுத்தும் துருத்தி, கொறுக்கை வரிசைகள் (ரீட்:சு வரிசை), காற்று வெளிச்செலுத்தும் குழாய்கள் (பைப்புகள்) என எளிமையான அமைப்புகள் இருக்கும்; ஆனால் மிடற்றுக் கருவியிலோ எண்ணற்ற நுண்ணிய நரம்புகளும், தசைநார்களும், தசைகளும், நுண் எலும்புகளும்—கூடி இணைந்து பணிபுரிகின்றன. நூற்றுக் கணக்கான நுண் அமைப்புகள் மனம் எனும் தலைவன் நினைத்த மாத்திரத்தில் ஒன்றுகூடி, ஒன்றோடொன்று இணைந்து இயங்குகின்றன. ஒரே ஒரு குரல்நாண் சிற்றிடை வெளியில் 14 சுரங்கள்—வலிவு, மெலிவு, சமன் இயக்கச் சுரங்கள் எழுகின்றன. இத்துணைச் சுரங்களின் ஒலி எழுப்ப நீண்ட பலகை அமைப்பு—ஒத்திசைப் பெட்டகத்தில் (ஆர்கன்) உள்ளது. கை செய்வதைக்—கால் நடப்பதை மனம் உணர்கிறது; அறிகிறது. ஆனால், குரல்நாண் இயக்கங்களை மனம் உணர்வதில்லை. அறிவதில்லை. இவ்வாறு மிடற்றுக்கருவி சீரிய வியப்புமிக்க கருவி; ஆண்டவன் மாந்தர்க்கெனப் படைத்த தனித்த இனித்த கருவி.

4. ஒலி எழுப்பும் ஒப்புமுறை:

ஒத்திசைப் பெட்டகத்தின் (1) ''துருத்தி, காற்றைச் செலுத்துகிறது; (2) காற்று கொறுக்கை (ரீட்:சு) வழிச் சென்று ஒலி எழுப்புகிறது; (3) ஒலிகள் குழாய்கள் வழிச்சென்று பெரும் ஒலியாக மாறுகின்றன. எனவே காற்று, துருத்தி, கொறுக்கை, ஒலிபெருக்குமமைப்பு (Organ pipes) என்பவை உள்ளன. இவை போன்றே காற்றுப் பையிலுள்ள மூச்சு பெருகிக் காற்றாகி, குரல் நாண் வழியாக உராய்ந்து வரும்போது, ஒலி உண்டாகி, வாய், அண்ணம், பல், நாக்கு, மூக்கு முதலிய ஒலி உறுப்புகளினால் இயக்கப்பட்டுப் பல மாற்றங்கள் அடைகின்றன. துருத்தி—மூச்சுப்பை; கொறுக்கை—குரல்நாண், குழாய்கள்—வாய், நாக்கு, மூக்கு முதலியவற்றிற்கு ஒப்புமையாகும்.

5. சிலப்பதிகார உரையில் குரலொலிபற்றி :

சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையில், அரும்பதவுரை யாசிரியர் குரலொலி இலக்கண விரிவுகளை எல்லாம் சுருக்கமாக ஆறு தொடர்களில் சுட்டியுள்ளார்! அவை வருமாறு :

1. மூலாதாரத்தில் மூச்சுத் தொடங்குதல்.
2. மூச்சைக் காற்றால் கிளப்புதல்.
3. கருத்தால் இயக்குதல்.
4. ஒன்றெனத் தாக்குதல்.
6. பண்ணீர்மைகளைப் பிறப்பித்தல்.

—சிலப். 3. அரங். 26. அரும். உரை.

இனி இந்த ஆறு மிடற்றொலி இலக்கணங்களையும் முறையே காண்போம்.

5 : 1. மூச்சு மூலாதாரத்துத் தொடங்கல் :

'மூச்சு' என்பது வேறு; காற்று என்பது வேறு. மூச்சு என்பது மென்காற்று; அது ஒலி எழுப்பாத மென்காற்று; மூச்சு திரண்டு கூடி எழுந்து ஒலியை எழுப்பும் காற்றாகிறது. மூலா தாரத்து நிரம்பும் மூச்சானது பெருகி ஒலி எழுப்பும் காற்றாகி வெளி வருகிறது. மூச்சுப் பையின் அடிப்பகுதியில் திரளும் காற்றை, விதானம் என்பது மேலே தள்ளிவிடுகிறது. இதுவே ''மூலா தாரத்தில் தொடங்கும் மூச்சு'' எனப்பட்டது. விதானம் என்பது கீழ்வயிற்று அறையினையும் மேல் நெஞ்சு அறையினையும் இடையில் பரந்துகிடந்து பிரிக்கும் இடைத்தட்டு. (டையா ப்ஃபிரம்— Diaphram) விதானத்தால் மூச்சுப்பை தள்ளப்படும்போது வெளி வருகின்ற காற்று சற்று வன்மையுடன் வெளிவரும்; ஆழமான ஒலி எழுப்பும். இவ்வொலியை, அடிவயிற்றொலி (diaphrag matic voice) என்பர். இனி விலாப்புறக் காற்றழுத்தத்தால் ஒலி எழுப்புவதை ''விலாப்புறத்தொலி'' (Costal type of voice) என்பர். அடிவயிற்றொலியே இடையில் சிறப்பும் இனிமையும் செறிவும் உடையது. இவ்வாறு ஒலிப்பதையே ''மூலாதாரத்து மூச்சைத் தொடங்குதல்'' என்றார் அரும்பதவுரையார். (சிலப், 3 : 26).

மேலைநாடுகளில் குரல்பயிற்சி வகுப்புகள் உண்டு; அவற்றிலே படிப்படியாய்க் குரலை வளர்க்கும் பல்வகைப் பயிற்சிகள் தரப்படு கின்றன; அடிவயிற்றில் கையை வைத்துக்கொண்டும்—மட்ட மல்லாக்கப் படுத்துக்கொண்டும்—குரலை அடிவயிற்று இயக்கத்தால் எழுப்புவதற்கு முறையான பயிற்சிவகைகள் தருவார்கள். அறி வியல் நெறிப்படி குரற்பயிற்சி தருவது இங்கு இசைக் கல்லூரிகளில் இல்லை. புது முறைகளை வரவேற்றுப் பயிலுதல் வளர்ச்சியாகும்.

5 : 2. காற்றல் கிளப்பல் :

ஒலி எழுப்பும் காற்றை உள்ளே இழுத்துக்கொள்ளுதல்—உட்கோடலாகும்; ஒலி எழுப்புதற்காகக் காற்றை வெளியே விடுதல்—வெளியிடலாகும். ஒலியின் நீளம், செறிவு, விரைவு தரம் முதலியவற்றிற்கேற்பக் காற்று வெளியிடப்படுகிறது. மூச்சுப் பயிற்சி வகைகளுள் சில இங்குக் கூறுதல் வேண்டும்: (1) மூச்சை உட்கோடற் பயிற்சிகள்; (2) காற்றுப்பையை விரியச் செய்து நிரப்பும் பயிற்சிகள்; (3) நிற்குமானம் நிறுத்தற் பயிற்சிகள். (மானம் = அளவு), (4) வெளியிடும் மானம் வெளியிடல். 5. அழுத்தியோ, மென்மையாகவோ வெளியிடல் பயிற்சிகள்; (6-13)

5 : 3. கருத்தாலியக்கல் :

மனத்தில் இன்ன எழுத்துகளை—இன்ன ஒலிகளை இவ்வாறு இயம்பவேண்டும் என்று நினைத்தமாத்திரத்தில்—ஒலிப்புக்குரிய தசை நார்கள், தசைகள், நரம்புகள், நாக்கு, வாய் முதலிய உறுப்புகள் யாவும் ஒன்றோடொன்று ஒன்றித்துக்கொண்டு வேண்டிய அளவில் இயங்குகின்றன. குரல்வளைக் குருத் தெலும்புகள் (Cricods), கேடய வடிவிகள் (Thyroids), தசை நார்கள் (aryte noids), குரல் நாண்கள் (Vocal chords), நாக்கு, நடுநாக்கு, நுனிநாக்கு, மேல் அண்ணம், கீழ் அண்ணம் முதலிய பல்வேறு அமைப்புகளும் ஓர் ஒலியை—ஓர் எழுத்தை ஒலிப்ப தற்காக இணைந்து ஒன்றி வேண்டிய அளவு இயங்கி இயங்கி அமைகின்றன. மாந்தன் நினைப்பே இவற்றைத் தாமாகவே இயங்கச் செய்கின்றன. இதனையே இசையாளர்கள் "கருத்தால் இயக்கல்" என்றனர். ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் இசையியல் வல்லுநர்கள் ஆராய்ந்தறிந்து கூறியுள்ளதை இன்றைய தமிழன் அறிந்தால் இன்பு பெறுவான். பேராசிரியர் பி. சாம்பமூர்த்தியார் தம் நூல்கள் ஆறிலும்—தென்னக இசை வரலாறு என்னும் ஆறு நூல்களிலும் ''சிலம்பிலே சிறந்து காணப்படும் மிடற்றெலி யியலை'' எங்கும் கூறவே இல்லை.

(தொடரும்)

———

இசைத் திறன்

மேதக்க எண்ணங்களை உள்ளத்தெழுப்ப, கடுஞ்சினம் கனிந்தெழும்படி தூண்ட, அன்பைப் பெருக்க, மனிதரை இயக்கி ஆட்கொள்ளச் செய்ய, எதற்கும் இசையினும் அருந்திறல் வாய்ந்த மறைகலை இல்லை.

—அடிசன்

ஐவாய்மான்

[பேராசிரியர் இரா. மதிவாணன்]

சென்ற இதழ், செந்தமிழ்ச் செல்வியில் பேராசிரியர் மு. வை. அரவிந்தன் அவர்கள் 'ஐவாய்மான்' (திருவிளையாடல்—மாணிக்கம் —54) குறித்துக் கட்டுரை வரைந்திருந்தார். ஐவாய்மான் தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்றதேயன்றி வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்ததன்று. நிகண்டுகளில் இடம்பெறும் இத்தகு சொற்கள் உலக வழக்கிலிருந்தும் தொகுக்கப்பட்டுள.

ஐவாய் என்னுஞ்சொல் தொடக்கத்தில் அழகிய வாய், அழகிய முகம் எனப் பொருள்தந்து மானைக் குறித்தது. மானை 'புல்வாய்' என்றும் குறிப்பிடுவது உண்டு. மானைக் குறித்த சொல்லாட்சி ஆவின் இளங்கன்றையும் நாளடைவில் ஆ (பசு)வையும் குறித்தது; மான் செவிக் கள்ளிச்செடிக்கு ஐவாய்க்கள்ளி என்றும் பெயருண்டு. சித்தமருத்துவம், கணக்கு, வானநூல், நிலைத்திணையியல் ஆகிய எத்துறை குறித்தும் செய்யுளால் இயன்ற நூல்களே எழுதப்பட்ட பண்டையோர் மரபு, இத்தகு அழகிய புதுப்புனைவுச் சொற்களால் அஃறிணைப் பொருள்களையும் பறவை விலங்கு போன்ற உயிரிகளையும் குறிக்க இடந்தந்துவிட்டது. வெற்றிலைக்கு மண்ணில் வேந்தன், மண்ணில் வேந்து (வெற்றிலை போட்டுக்கொண்டவர் முகம் வேந்தன் முகம் போல் மகிழ்ச்சி மீதூர்ந்து காணப்படுதலின் பெற்ற பெயர்—மண்ணில் முளைத்த இலைக்கொடிகளுக்குள் வேந்தன்) எனப் பெயரிட்டனர். நாடகக் கலைஞரும், நாட்டுமருத்துவரும் இச்சொல்லைப் பொதுமக்களிடை வெள்ளோட்டம் விட்டனர். வேடிக்கையாகப் புழக்கத்தில் விடப்பட்ட சொல் தஞ்சை மாவட்டத்துத் தாழ்த்தப்பட்டவரிடை பேச்சு வழக்கில் நிலைபேறடைந்துவிட்டது. 'எனக்குச் சிறிது வேந்து (வெற்றிலை) கொடு' என்று அவர்கள் உரையாடுவதை இன்றும் கேட்க முடிகிறது. வேந்து என்னும் சொல் எந்தத் தமிழிலக்கியத்திலும் வெற்றிலை என்று பொருள்படாததால் வேற்றுமொழியிலிருந்து தமிழுக்கு இறக்குமதியான சரக்கு என்று முடிவு கட்டலாகாது.

உலக வழக்கில் கற்றோரிடை வளரும் பல்வகைப் படைப்புச் சொற்களும் கல்லாரிடை வழங்கும் உய்த்துணர் ஆக்கச் சொற்களும் திரிபுச் சொற்களும் எந்த நாட்டு இலக்கியத்திலாயினும் கல்வெட்டிலாயினும் எழுத்துலகில், முழுமையாக இடம்பெறுது. கற்றோர் அறியா நற்றமிழ்ச் சொற்கள் கல்லார் நாவில் பல்லாயிரக்கணக்கில் வழக்கிலுள. அவை பல்லாயிரக்கணக்கான ஆண்டுத் தொன்மை

யின. இத்தகு தொன்மையான பேச்சுவழக்கிலுள்ள சொற்களின் அடிவரவு, பேச்சு வழக்கிலில்லாத வடமொழியில் இயல்பாகத் தோன்றியிருக்க வாய்ப்பே இல்லை. தமிழிலுள்ளவற்றைத் தொகுப்பாரிலாத குறையால் அவை தேய்ந்து மறைகின்றன.

கடைக்கழகக் காலத்துச் சமண முனிவர்கள் தென்னாட்டுக் குகைகளில் வாழ்ந்தபோது அரிமா (சிங்கம்) இங்கும் இருந்ததைக் கண்டிருக்கிறார்கள். அதனை வடநாட்டு விலங்கென்றே முடிவு கட்டவியலாது. நான்கு கால்களாலும், வாயாலும், ஆக ஐந்துறுப்பாலும், பகையைப் பற்றித் தாக்கும் அரிமா (சிங்கம்)வும் கரடியும் ‘ஐவாய்மான்’ (ஐந்து வாயில்களாலும் தாக்கும் விலங்கு) என்று ஒருசார் தமிழர்களால் குறிக்கப்பட்டுள. எருவாய், கருவாய், என்னுஞ் சொற்களில் வாய் - வாயில் எனப் பொருள்படுதல் காண்க. பின்னர் அது ஐந்துறுப்பு எனப் பொருள்பட்டபோது ஆமையைக் குறித்த சொல்லாகவும் ஒரோவிடத்து வழங்கியிருக்கிறது. குறிப்பாகக் குழந்தைகளுக்குப் புனைகதை கூறுவோர், [ஐந்துளவு (பஞ்சதந்திர) கதை போன்றது] பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் வேறு கற்பனைப் பெயர், அல்லது உய்த்துணரும் காரணப்பெயரிட்டே வழங்குவர். பன்றி என்று குறிப்பிடாமல் கோணவாயன் என்று குறிப்பிடுவர். அக்கதைகளை யாரேனும் எழுதி வைத்து நாட்டின் பலவிடங்களிலும் பரவச்செய்தால் அவை இலக்கியமாகிவிடுகின்றன. எல்லாவற்றையும் தம் மொழியில் மொழி பெயர்க்கும் வடமொழியாளர் இக்கதைகளைப் பெயர்க்கும் போது பன்றி எனக் குறிப்பிடாமல் கோணவாயன் என்பதற்குரிய வடசொல்லால் குறிப்பிடுவர். இந்த வழக்கம்பற்றியே, வடமொழியில் தமிழ் நெய்தல் நிலம் (உண்மைப் பொருள் அறியாதவர்களால்) ‘க்ருத பூமி’ (நெய் நிலம், க்ருத - நெய்) என்று மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது.

ஐவாய்மான் என்று எக்காரணம் கருதித் தமிழில் அரிமாவுக்குப் பெயரிட்டனர் என்றறியாத வடமொழியினர், நேரடியாக மொழி பெயர்த்து பஞ்சானனம் என்றும் பஞ்சாசியம் என்றும் சொற்படைத்துவிட்டனர். வடமொழியில் வாயைக் குறிக்க முகத்திற்குரிய சொல்லையே ஆள்வர். அதுநோக்கி வடமொழிக்கு வாயில்லை என்னும் பழமொழியும் வழங்குகிறது.

வடமொழியினர் காலில் ஐந்து விரல்களுள்ள அரிமா, கரடி, யானை ஆகியவற்றை இச்சொல் (*Skt.* panchanana - any animal having five toes or claws.) குறிப்பதாகச் சமாளிக்கின்றனர். முகத்தைக் குறிக்கும் ஆனனம், ஆசியம் என்னும் சொற்கள் எப்படி விரலைக் குறிக்கும்? கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

பஞ்சானனம் என்பது பரந்த முகமுடைய அரிமா என்று பொருள்படுவதன்று. பரந்த நெற்றி என்றவிடத்துத் தட்டையாக இருப்பதையே 'பரந்த' என்னுஞ்சொல் குறிக்கும். அரிமாவின் முகம் தட்டையானதன்று. இனி, பிடரி பரந்திருக்கிறது, விரிந்திருக்கிறது எனப் பொருள் கொண்டால் பரந்த பிடரி என்று பொருள்படும் வட சொல் பொருந்துமேயன்றிப் பரந்த முகம் என்று பொருள்படும் பஞ்சானனம் பொருந்தாது.

பஞ்சசயனம் என்னும் சொல்லாட்சி ஐந்தணைப் பாயலையே. குறித்தது. விரிந்த படுக்கையை அன்று. "மெத்தென்ற பஞ்ச சயனம்" (திருப்பாவை-19). படுக்கை விரிந்த நிலையில்தான் இருக்கும்? சுருண்டா கிடக்கும்? விரிந்த படுக்கையை அல்லது ஐந்தணைப்பாயலைப் பரந்த படுக்கை அல்லது மெத்தை என்று கூறுவது மரபன்று. நம் மனக் கண்ணால் கணிக்கும் இயல்பான அளவுக்குமேல் பரந்திருப்பதைத்தான் 'பரந்த' எனக் குறிப்பிடுவது வழக்கம் - ஒ. நோ : பரந்த நெற்றி, பரந்த ஞாலம்.

ஐவாய்மான் ஓரிடத்தில் கரவறியாக் கானகத்து மானையும், மற்றோரிடத்தில் கடுங்கொலை அரிமாவையும் குறித்துச் சொல்லாட்சி பெற்றிருப்பது அவ்வக் காலத்தின் கோலம். இத்தகு சொற்களுக்கு 'உய்த்துணர் காரணப்பெயர்' என்று பெயரிடலாம். இஃதறியாதார், "wrong translation of 'pancha' into five, in the word panchanana of broad faced, a term for the lion (செ. அக.)" என்றும்,

"ஐவாய் மிருகம் கரடி, Indian black bear - Melursus ursinus. It is so called from its prehensile power of its four feet and mouth (சா. அக.)" என்றும் பிறழக் கொண்டனர்.

———

ஒழுக்கக் கேட்டின் விளைவு

தனி மனிதரின் ஒழுக்கக்கேடு அவர் குடிக்கும் குவளையின் அசுத்தம் போன்றது. அது அவர்க்கு மட்டுமே தீங்கு ஆகும். தனி மனிதர் பிறர்க்குச் செய்யும் கேடு அவர் தோட்டத்துக் கிணற்றின் அசுத்தம் போன்றதாகும். தமக்கு மட்டுமல்லாமல் வேறு சிலர்க்கும் அது தீமை செய்வதாகும், ஆனால் எல்லார்க்கும் பொதுவாகச் சட்டத்தைப் புறக்கணிப்பது, ஓடும் வாய்க்கால் நீரை அசுத்தம் செய்வது போன்றது. அதன் தீமை எல்லாரையும் தாக்கவல்லது.

—டாக்டர் மு. வரதராசனர்

கந்தரலங்காரச் சந்தப் பாடல்கள்

[க. சி. கமலையா]

துள்ளும் நடையில் தெள்ளு தமிழ்:

அருணகிரிநாதரின் சந்தப் பாடல்கள் சிந்தையைக் கவர்வன. திருப்புகழ்ப் பாடல்களில் பத்திச் சுவை நனி சொட்டுகின்றது. அவற்றின் தாளவேறுபாடுகளும் சந்தவேறுபாடுகளும் இசைக் கலைஞர்களை ஈர்த்துச் சொக்கவைக்கின்றன. ''நான்முகனுக்கு நான் செய்த குற்றமென்ன? திருப்புகழ்த் துணைகொண்டு,''

"நின் தண்டையந்தாள்
சூடாத சென்னியும் நாடாத கண்ணும் தொழாதகையும்
பாடாத நாவும் எனக்கே தெரிந்து படைத்தனனே,"

என்று வேதனைப்படுகிறார். அருணகிரிநாதரின் பாடல்களின் துள்ளல் நடை பாடுவோர் நெஞ்சங்களைத் துள்ளச்செய்யும்; உள்ளத் தோடு உடம்பும் அசைந்தாடும்.

''ஒரு நிலையில் இருக்கவொட்டாது இடர் செய்கின்றனர் ஐவர். என்செய்வன் யான்?'' என்று முருகனிடம் முறையிட்டுச் சூரனைச் சூறையிட்டவனுக்கு இதுவொரு பொருட்டா, என்று சொல்லும்பொழுதே எத்துணை மிடுக்குடன் தமிழ்நடை துள்ளுகிறது!

"சென்று தேவருய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட் டாரியிட் டோரிமைப் போதினில் கொன்றவனே."

தமிழ் இலக்கியவானில் அருணகிரிநாதரின் பாடல்களை ஒரு திருப்பம் எனலாம். வட சொல்லாட்சி சற்றே மிகுதியாயிருப்பினும் மக்கள் அதைப் பொருட்படுத்திலர்.

"சிகராத்ரி கூறிட்ட வேலும் செஞ்சேவலும் செந்தமிழால்
பகரார்வம் ஈ"

என்று தீந்தமிழைத் தெய்வத்தமிழாய் அவர் போற்றுகிறார். அது மட்டுமன்று. ''துன்பக் கடலில் மூழ்கிச் சாகின்றேனே! நீ எங்கு தொலைந்துபோய்விட்டாய்?'' என்று தமிழில் திட்டுகின்றவனுக்கும் அவன் அருள்புரிவான்.

"மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்போன்."

திருமால் மருகன் முருகன் என்று கசிந்துருகுவார் அருணகிரிநாதர்.

தாயுமானவர் அருணகிரிநாதரை வாய்மணக்கப் புகழ்கிருர்.

"ஐயா அருணகிரி அப்பா உனைப்போல்
மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்?"

என்றும்,

"கந்தரனு பூதிபெற்றுக் கந்தரனு பூதிசொன்ன
எந்தை யருள்நாடி இருக்குநாள் எந்நாளோ?"

என்றும் சொல்லி மகிழ்கிருர். வடமொழிச் சொல்லாட்சியில் திளைத்தவரெனினும் தாயுமானவர் தம்பாடல்கள்வழி அருணகிரி நாதரைப்போல மக்களை மகிழ்விக்கிருர்—ஆம், தமிழ்ப் பாடல்களின் துணைகொண்டுதான்.

அலங்காரத்தில் திருவாசக எதிரொலி :

"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

என்று திருவாசகத் தேனைப் பருகிய இராமலிங்க சுவாமிகள் மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்த தமிழ்மாமறையின் ஆசகன்ற அனுபவத்தை அனுபவிக்க அருளுமாறு வேண்டுகிருர். அருணகிரி நாதரின் கந்தரலங்காரப் பாடல்கள் திருவாசகத்தில் ஊறித் திளைத்த அவர்தம் உள்ளத்தைத் தெள்ளத் தெளியக் காட்டுகின்றன,

"ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோற லறிலை செய்வதொன் றறியேனே"

என்று மாணிக்கவாசகர் எத்துணையுமில்லாத் தம்நெஞ்சைச் சாடுகிருர். இத் திருவாசகப் பாடலை நினைவூட்டும் வகையில் அருணகிரி நாதரின் கந்தரலங்காரப் பாடலொன்று அமைகிறது.

"படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காஎன் கிலைமுசி யாம லிட்டு
மிடிக்கின் றிலைபர மானந்தம் மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே,"

முருகன் புகழ் பாடவில்லையே என்று மேலும் சிலபாடல்களில் குறை பட்டுக்கொள்கிருர் அருணகிரிநாதர்.

..........."நீ செந்திலோன் திருக்கை
வேலென்கிலை, கொற்றமயூரம் என்கிலை, வெட்சித் தண்டைக்
காலென்கிலை, மனமே எங்ஙனே முத்தி காண்பதுவே."

"நெஞ்சே, கரிக்கோட்டு முத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோடன் என்கிலை குன்றமெட்டும்
கிழித்தோடு வேல் என்கிலை எங்ஙனே முத்தி கிட்டுவதே."

திருவாசகத் தேனில் இன்னொரு சொட்டு அமுதக்கடல் போலத் தித்திக்கிறது.

"வான்கெட்டு மாருதம் மாய்ந்து அழல்நீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென் உள்ளமும் போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ."

இப் பாடலுக்கு கா. சுப்பிரமணியப் பிள்ளை எழுதிய உரையும் குறிப்பும் பின்வருமாறு:

"உரை: ஆகாயம் அழிந்து காற்று இல்லாமற்போய், நெருப்பும் நீரும், மண்ணும் ஒழிந்துபோயினும், தான் ஒடுங்குதலின்றி, அசைவில்லாத இயல்புடைய பெருமான் பொருட்டு, எனது உடம்பொழிந்து, ஆவியற்று, சுட்டறிவொழிந்து, அகக் கரணங்கள் தொலைந்து, தற்போதமும் கெட்ட விதத்தைப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக.

குறிப்பு: சலிப்பு—அசைவு. அண்டத்தில் ஐம்பூதங்களின் கேட்டினை யுணர்த்தியதுபோலப் பிண்டத்திலும் 'ஊன், உயிர், அறிவு, உள்ளம், நான்' என்ற ஐந்தின் ஒடுக்கங் கூறினமை காண்க."

திருவாசகப் பாடலின் ஒளிப்பதிவு—ஒலிப்பதிவு போன்று அருணகிரிநாதரின் கந்தரலங்காரப் பாடலொன்று சிந்தனையைத் தூண்டுகிறது.

"வரையற்று அவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித்த வாபஞ்ச பூதமுமற்று
உரையற்று உணர்வு அற்றுஉடலற்று உயிரற்று உபாயமற்று
கரையற்று இருளற்று எனதுஅற்று இருக்கும்அக் காட்சியதே."

சும்மாயிருக்கும் நிலை:

தமிழ்மக்கள் நாவில் 'சும்மா' என்ற பொருள் பொதிந்த சொல்லொன்று தவழ்கிறது. பொருளோ விண்டுரைக்க முடியாதது.

"செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா யிருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றும்அறிந் திலனே"

என்று கந்தரனுபூதியில் அருணகிரிநாதர் பாடுகிறார். மதயானையை வசமாக்கியும், கரடி வெம்புலிவாயைக் கட்டியும், சிங்கத்தின் முதுகின் மேலேறியும், பாம்பை ஆட்டியும், தாமிரத்தைத் தங்க மாக்கியும், யாருக்கும் புலப்படாமல் உலாவியும், விண்ணவரை ஏவல் கொண்டும், கூடுவிட்டுக் கூடு பாய்ந்தும், என்றும் இளமை யோடும், நீர்மேல் நடந்தும், நெருப்பின்மேலிருந்தும், நிகரிலாச் சித்தி பெறுவதும் அரிதல்ல.

"சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறம் அரிது, சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே.
தேசோ மயானந்தமே"

என்று தாயுமானவர் 'சும்மா இருக்கும்' நிலையைப்பற்றிப் பேசு கின்றார்.

"சொல்லுகைக்கில்லை என்று எல்லாம் இழந்து சும்மாவிருக்கும்
எல்லையுள் செல்ல எனைவிட்டவா! இகல் வேலன்நல்ல
கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக் கல்வரைக் கொவ்வைச் செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத் தோளண்ணல் வல்லபமே"

என்று பாடுவார் அருணகிரிநாதர் கந்தரலங்காரப் பாடலில்.

"வேதாகமச் சித்ர வேலாயுதன் வெட்சி பூத்த தண்டைப்
பாதார விந்தம் அரணாக அல்லும் பகலும் இல்லாச்
சூதானது அற்ற வெளிக்கே ஒளித்துச் சும்மா யிருக்கப்
போதாய் இனிமனமே"

என்று மேலும் அருணகிரிநாதர் விளக்கம் தருகிறார்.

முருகன் திருப்பதிகள் :

நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவனும் திருமாலும் எழுந்தருளியிருக்கும் ஊர்களைத் தம் பாடல்களில் குறித்திருப்பது தமிழ்நாட்டைப்பற்றிய தகவலைச் சேர்ப்பவர்க்குத் துணைபுரியும். அவ்வகையில் அருணகிரிநாதரும் முருகன் அருள்பாலிக்கும் திருப் பதிகளையும் திருக்கோயில்களையும் பாடியுள்ளார். திருப்புகழ்ப் பாடல்களில் பல ஊர்கள்பற்றிய பட்டியல் கிட்டும். கந்தரலங் காரத்தில் சிறப்பாகத் திருச்செந்திலும் திருச்செங்கோடும் திருத்

தணியும் இடம்பெறுகின்றன. 'திருச்சீரலைவாய்' என்பது இனிய தமிழ்ப் பெயர். 'சிந்து' என்ற வடமொழிச் சொல்லுக்குக் கடல் என்பது பொருளாகும். 'சிந்து' என்ற வடமொழிச் சொல்லும் 'இல்' என்ற தென்மொழிச் சொல்லும் 'சிந்தில்' (அதாவது கடலகம்) என்ருகிச் 'செந்தில்' என்று வழங்கலாயிற்று. கடற்கரை ஊராகிய 'சிந்தூர்' பின்னர் செந்தூர் ஆனது. 'அலைவாய்' 'செந்தில்' என்ற இரு சொல்லாட்சிகளும் சங்க நூல்களில் இடம் பெறுகின்றன.

அலங்காரமும் சிலம்பும் :

"வேலனுர் வந்து வெறியாடும் வெங்களத்து
நீலப் பறவைமே னேரிழை தன்னேடு(ம்)
ஆலமர் செல்வன் புதல்வன் வரும்"

என்று பெண்கள் குன்றக்குரவை பாடி ஆடுவர் எனச் சிலம்புரைக்கும்.

"நீலச் சிகண்டியில் ஏறும்பிரான் எந்த நேரத்திலும்
கோலக் குறத்தியுடன் வருவான்"

என்று கந்தரலங்காரத்தில் அருணகிரிநாதர் பாடுவார்.

"சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா விறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே

* * *

வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகுபெயர்க் குன்றங் கொன்ற நெடுவேலே"

என்று பாடினர் குன்றக்குரவை யாடிய பெண்கள்.

"சிந்து வெந்து
கொக்குத் தறிபட்டு எறிபட்டு உதிரம் குமு குமுகெனக்
கக்கக் கிரியுருவக் கதிர்வேல் தொட்ட காவலன்"

என்றும்,

"கிளைத்துப் புறப்பட்ட சூர்மார்புடன், கிரியூடுருவத்
தொளைத்துப் புறப்பட்ட வேல்கந்தனே"

என்றும் கந்தரலங்காரம் வேலனைப் பாடும்.

முறையிடு :

பிறர் குறைகளைத் தம்மேலேற்றிப் பாடுவது அடியார் கையாளும் முறை. அருணகிரிநாதரும் இவ்வகையைச் சேர்ந்தவர்.

"பேற்றைத் தவஞ்சற்றும் இல்லாத என்னைப் பிரபஞ்சமென்னும்
சேற்றைக் கழிய வழிவிட்டவா, செஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன், கிருபாகரனே."

ஒன்றும் செய்யாது மனஉளைச்சலுடன் தம்மையே நொந்துகொள்கிறார் அருணகிரிநாதர்.

"சிந்திக்கி லேன்நின்று சேவிக்கிலேன் தண்டைச் சிற்றடியை
வந்திக்கி லேன்ஒன்றும் வாழ்த்து கிலேன்மயில் வாகனனைச்
சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேன் உண்மை சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமும் காயக் கிலேசமும் போக்குதற்கே."

சோற்றைத் தின்று உணவுத்தொகுதியான உடம்பு உயிர் நீங்கிய பின் எரியூட்டப்பட்டு ஒருபிடி சாம்பராகிவிடுகிறது. எனவே நாவால் வழுத்தவேண்டும் முருகனை.

"பொருபிடி யும்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல! சண்முக வாஎனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண்டு இட்டுண்டு இரும் வினையோம்
ஒருபிடி சாம்பரும் காணாது மாய உடம்பிதுவே." [இறந்தால்

சேரிட மறிந்து சேரா என்னைக் காத்து ஈடேற்றுவாய் எனறும் அருணகிரிநாதர் பாடிப் பரவுகிறார்.

"வணங்கித் துதிக்க அறியா மனிதருடன் இணங்கிக்
குணங்கெட்ட துட்டனை யீடேற்றுவாய், கொடியும் கழுகும்
பிணங்கத் துணங்கை அலகைகொண் டாடப் பிசிதர்தம்வாய்
நிணம்கக்க விக்ரம வேலாயுதம் தொட்ட நிர்மலனே."

———

கட்டுரையாளர் கவனத்திற்கு

தாள் விலை ஏற்றம் காரணமாகச் 'செல்வி'யில் அதிக பக்கங்கள் வெளியிட இயலவில்லை. எனவே, கட்டுரை எழுதும் அன்பர்கள் நீண்ட தொடர் கட்டுரைகளைத் தவிர்த்து, சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் புதிய கருத்துகளையே எழுதி அனுப்பின், நலமாகும் எனத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்.

கழகம் வ. சுப்பையா பிள்ளை அறக்கட்டளை நிறுவு விழா

சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பன்னிருவர் பெயரில் அறக்கட்டளைகள் நிறுவும் திட்டத்தின்கீழ் கழக மேனுள் ஆட்சியாளர் தாமரைத் திரு. செந்தமிழ்ச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்கள் பெயரில அறக்கட்டளை நிறுவப்பெற்றது. 6—10—83 வியாழன் மாலை சென்னை தேவநேயப்பாவாணர் மாவட்டமைய நூலகத்தில் நடைபெற்ற சிறப்பு விழாவில், அந் நிறுவனத்தின் தலைவரான தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு. செ. அரங்கநாயகம் அவர்களிடம் அறக்கட்டளை நிதியான ரூ. 10,000க்கான காசோலையைக் கழக ஆட்சியாளர் திரு. இரா. முத்துக்குமாரசாமி வழங்கினூர்.

விழாவிற்குச் சென்னை கிறித்து சமயப் பேராயர் அருள்தந்தை அருளப்பா அவர்கள் தலைமை தாங்கினூர்.

பிள்ளையவர்கள் பெயரில் நிறுவப்பெற்றுள்ள அறக்கட்டளையின் சார்பில் ஆண்டுதோறும் சைவசித்தாந்தம், தமிழ்நூல் பதிப்புத் துறை ஆகிய இரண்டில் ஏதேனும் ஒரு பொருள்பற்றி மூன்று நாள் அறக்கட்டளைச் சொற்பொழிவை நிகழ்த்தும் அறிஞர் ஒருவருக்கு ரூ. ஆயிரம் வழங்கப்பெறும். அச் சொற்பொழிவுகள நூல் வடிவில் அவ்வமயமே உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பெறும். இவ்வகையில் ஆண்டுதோறும் இந்த அறக்கட்டளையின்பெயரால் ஓர் அரிய ஆய்வு நூல் வெளிவரும்.

இவ் விழாவில் 'கிறித்துவமும் தமிழும்,' 'இசுலாமும் தமிழும்', 'இசுலாமியத் தமிழிலக்கியம்,' 'டாக்டர். உ. வே. சாமிநாதையர்', 'மாண்புமிகு. செ. அரங்கநாயகம்' அவர்கள் ஆகியோர் பெயரிலும் அறக்கட்டளைகள் நிறுவப்பெற்றன.

அறக்கட்டளைகளை ஏற்றுக்கொண்ட கல்வி அமைச்சரவர்கள் ஆய்வுச் சொற்பொழிவுகள் மக்களுக்குப் பயன்படும் வகையில் அமையவேண்டுமென்று குறிப்பிட்டார்.

நிறுவனத்தின் இயக்குநரான டாக்டர். ச. வே. சுப்பிரமணியம் அவர்கள் முதலில் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் செம்மையாக நடைபெற அவ்வத் துறையில் கற்றுத் துறைபோய ஆய்வறிஞர்கள் பயன்படுத்தப்பெறுவார்கள் என்று குறிப்பிட்டார்.

வ. சு. பிள்ளையவர்கள் பெயரில் அமைந்த அறக்கட்டளைக்குரிய காசோலையை வழங்கிய திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் தமிழ் நூல்பதிப்புத் துறையில் பெருந்தொண்டாற்றிய பேரறிஞர்கள் பலரை நினைவுகூர்ந்து அவர்கள் பணியெல்லாம் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் வாயிலாக வெளிவர வேண்டுமென்றூர். நிறுவனப் பேராசிரியர் டாக்டர். ஏ. என். பெருமாள் நன்றி கூறினூர்.

திரு. தி. வை. சங்கரக் குமாரு அவர்களின் மணிவிழா

சை. சி. நூற்பதிப்புக் கழக நூலாசிரியருள் ஒருவரும், நல வழிக் கல்வியாளரும், 'நமது உணவு' 'பாரதியும் திரு. வி. கவும்' என்னும் நூல்களின் ஆசிரியருமான நெல்லை. திரு. தி. வை. சங்கரக் குமாரு அவர்களின் மணிவிழா, அவரது இல்லத்தில் 29—9—83ல் சிறப்பாக நடைபெற்றது. கணபதி ஓமம், திருநாண் பூட்டுதல் இன்னபிற நிகழ்ச்சிகளை இராமலிங்க தேசிகர் அவர்கள் முன்னின்று நடத்திவைத்தார்கள். நம் கழகத்தின் சார்பில் நெல்லைக் கிளை மேலாளர் திரு. பிச்சுதாயப்பன் அவர்கள் கலந்துகொண்டு இவ் விழாவினைச் சிறப்பித்தமை குறிப்பிடத் தக்கது.

அத்துடன் திருப்பனந்தாள் திருமடத்தின் தலைவரவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தமையும் சிறப்புக்குரிய செய்தியாகும். அடிகளார் அனுப்பிய வாழ்த்துச் செய்தி வருமாறு :

திருநெல்வேலி திரு. வை. சங்கரக் குமாரு அவர்கட்கு,

செந்திலாண்டவன் திருவருள் முன்னிற்க.

''தங்களுக்கு மணிவிழா நிகழவிருப்பது அறிந்தோம். மகிழ்ச்சி; அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, எனும் ஐந்தை, சால்பு எனும் மாளிகை தாங்கும் தூண்களாக, உருவகித்தது வள்ளுவம். அந்நெறி மேற்கொண்டு, நெறியறியாது மருள்வார்க்கு, நிறை மனதுடன் ஒல்லும் வகையான் உதவிகள் புரிந்துவரும் தாங்கள், நிறை நலன்கள் எய்தி நீடுவாழ, செந்திற் கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம். திருவருட் பிரசாதம் இத்துடன். சுபம்.''

(ஒப்பம்) ஸ்ரீலஸ்ரீ காசிவாசி,
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்,
திருப்பனந்தாள்.

திரு. தி. வை. சங்கரக் குமாரு அவர்கள் மேலும் பவளவிழா, முத்துவிழா, நூற்றாண்டுவிழா என விழாக்கள் பலகண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ, கழகத்தின் சார்பிலும், செந்தமிழ்ச் செல்வியின் சார்பிலும் உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்.

நலவழி நாட்டமும் நல்லோர் நட்பும்
பலதுறைக் கல்வியும் பாங்குடன் பெற்று
மணிவிழாக் காணும் மாண்புடை சங்கரர்
பலவிழாக் கண்டு நலமுடன் நாளும்
வளமார் வாழ்வில் வாழி வாழியவே !

கழக நூலாசிரியர்
சு. அ. இராமசாமிப் புலவர் மறைவு

கழக நூலாசிரியருள் ஒருவராகவும், முதுபெரும் புலவராகவு மிருந்து நூற்றுக்கணக்கான நூல்களை எழுதித் தந்து கழகத்தின் மாண்பினை உயர்த்தியவரான சு. அ. இராமசாமிப் புலவரவர்கள், தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப் பூண்டிக் கண்மையிலுள்ள கருப்பக்கிளர் என்னும் தம் சிற்றூரில் 6—10—1983 காலை 4 மணி அளவில் தமது 76 ஆம் அகவையில் இறைவன் திருவடி நீழலை அடைந்தனர் என்னும் செய்தி கேட்டு ஆற்றொணத் துயரெய்துகின்றோம்.



திரு. புலவரவர்கள், 8-3-1907ல், ஆயக்காரன் புலம் என்னும் சிற்றூரில் சதாசிவம் பிள்ளை, இரத்தினம் ஆச்சி ஆகியோரின் நற்றவப் புதல்வராகத் தோன்றினார். நடுநிலைப் பள்ளியொன்றில் சேர்ந்து ஏழாம் வகுப்பு வரையில் கல்வி பயின்ற இவர் தொடர்ந்து கல்வி பயிலத் தில்லைக்கு வந்தார். அங்கு எதிர்பாராவிதமாக கடுங்காய்ச்சல் ஏற்பட்டு அதன் விளைவாக இவர்தம் செவிப்புலன் கேட்கும் வலிமையை இழக்க நேர்ந்தது. எத்துணையோ மருத்துவங்கள் செய்தும் பயன் இல்லாமற் போயிற்று. எனினும் கல்வியில் இவருக்கிருந்த ஆர்வம் குறைய வில்லை. தமிழ் இலக்கியங்களைத் தமிழாசிரியர் சிலரிடம் கேட்டுப் படிக்கலானார். அத்துடன் ''கண்டதைக் கற்கப் பண்டிதனாவான்'' என்னும் முதுமொழிக்கேற்ப, பல்துறை நூல்களையும் தாமே படித்துப் புலமை பெற்றார்.

மேனாள் கழக ஆட்சியர் தாமரைத் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களின் உழுவலன்பராகத் திகழ்ந்து அவர்கள் எண்ணிய வண்ணமும் சொன்ன வண்ணமும் உரை நூல்களாகவும், வரலாறுகளாகவும், கதைகளாகவும் பல்வகை நூல்களை உருவாக்கிக் கழக வெளியீடுகளின் எண்ணிக்கை உயருமாறு செய்தவர் இவரே எனில் மிகையாகாது.

புலவரவர்கள் கழக நூலாசிரியராக மட்டுமின்றி மேனாள் கழக ஆட்சியரின் குடும்ப நண்பர்களுள் ஒருவராகவும் திகழ்ந்தார்.

இப் புலவர் பல ஊர்களுக்கும் சென்று நூல்களைத் தேடி அலைந்து படித்துப் புதுப்புது நூல்களை உருவாக்கினார். தொகை அகராதி, சிறப்புப் பெயரகராதி எனப் பல தொகுப்பு நூல்களை உருவாக்கிய தோடு, தமிழகத்தில் தோன்றிப் புகழ்பரப்பி மறைந்த தமிழ்ப் புலவர் களின் வரலாறுகளையெல்லாம் தொகுத்துத் ''தமிழ்ப் புலவர் வரிசை'' என்னும் வரிசையிலும், தமிழ்ப் புலவர் அகரவரிசை என்னும் வரிசையிலும் இவர் எழுதியுள்ள நூல்கள் ஏராளம்! ஏராளம்! தமிழ்ப் புலவர் வரிசையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட புலவர்களின் வரலாறுகளை 31 தொகுதிகளாகவும், தமிழ்ப்புலவர் அகரவரிசை என்னும் தலைப்பில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட சுருக்க வரலாறுகளையும் தொகுத்த பெருமை இவரையே சாரும்.

மேற்கோள் விளக்க அகரவரிசை (2 தொகுதிகள்) மற்றும் தென்னாட்டுப் பழங்கதைகள் (8 நூல்கள்) தனிப்பாடல் திரட்டு (6 நூல்கள்) போன்றவை படித்தற்குச் சுவையும் பயனுமுடையவை.

மேலும் பிரபுலிங்க லீலை உரை, சூளாமணி உரை, திருப்போரூர் சன்னிதிமுறை உரை, இரங்கேச வெண்பா, முதுமொழி வெண்பா என்னும் வெண்பா நூல்கட்கு உரை என்றின்ன பிற உரைநூல் களையும் எழுதிச் சிறந்த உரையாசிரியராகவும் மதிக்கப்பெற்றார்.

படிப்போர்க்கு எளிதில் பயன்படும் வகையில் கம்பராமாயணம், வில்லிபாரதம், கந்தபுராணம், விநாயக புராணம், சூளாமணி போன்ற நூல்களை உரைநடை நூல்களாக உருவாக்கித் தந்தவரும் இவரே.

இப் புலவரவர்கட்கு ஆண்மக்கள் இருவரும், பெண்மக்கள் மூவரும் உளர். இங்ஙனம் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த புலவரவர் களின் மறைவு தமிழுலகிற்குப் பேரிழப்பேயாகும். மறைந்த புலவரின் குடும்பத்தார்க்குக் கழகத்தின் சார்பிலும் செந்தமிழ்ச் செல்வியின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

புகழுடம்பில் வாழ்கின்றாரே!

திருமுருகப் பற்றுமிகக் கொண்ட மேலோன்
    தீந்தமிழில் நூல்கள்பல தந்த தோடு
அருமைமிகு தென்னாட்டுப் பழங்க தைகள்
    அடுக்கடுக்காய்த் தந்திட்ட அறிஞர்; மேலும்
பெருமைமிகு 'தமிழ்ப்புலவர் வரிசை'க் காகப்
    பேருழைப்புக் கொண்டவரும் ஆன எங்கள்
திருவினராம் இராமசாமிப் புலவர் இன்று
    இறையடியில் புகழுடம்பில் வாழ்கின் றாரே!

—நாஞ்சில், கா. கணபதி.

திரு. மீ. ப. சோமு அவர்கட்கு ரூ. 20,000 பரிசு

டாக்டர் இராஜா சர் அண்ணுமலை செட்டியார் அவர்களின் பெயரில் நிறுவப்பட்டுள்ள, ஆண்டுதோறும் சிறந்த நூலெழுதும் நூலாசிரியருக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ், 1979-82ஆம் ஆண்டுகளில் வெளிவந்த நூல்களுள் "நமது செல்வம்" என்னும் சிறந்த நூலினை எழுதிய திரு. மீ. ப. சோமசுந்தரம் (சோமு) அவர்களுக்கு 20,000 வெண்பொற் காசுகள் வழங்குவிழா, 30-9-83ல் (இராஜாசர் அண்ணுமலை செட்டியார் பிறந்தநாள் விழா) இராசா அண்ணுமலை மன்றத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ் விழாவிற்கு உயர்நீதிமன்ற நடுவர். மாண்புமிகு பி. ஆர். கோகுலகிருட்டிணன் அவர்கள் தலைமை ஏற்றுப் பரிசினை வழங்கினர். திரு. எஸ். கோவிந்தசுவாமிநாதன், எம்.ஏ., (பார்-அட்லா) அவர்கள் வரவேற்புரை ஆற்றினர். படைப்பாசிரியர் திரு. சோமு அவர்களின் ஏற்புரைக்குப்பின், திரு. ஏ. ஜி. சிவராமகிருட்டிணன் அவர்கள் நன்றி நவின்றார். இவ் விழாவினையொட்டி நேஷனல் தியேட்டர்ஸ் அளித்த, நாடகக்காவலர் திரு. ஆர். எஸ். மனோகரின் "மாவீரன்" என்னும் நாடகம் நடைபெற்றது.

அனைவராலும் "சோமு" என்றே அன்புடன் அழைக்கப்படும் திரு. சோமசுந்தரம் அவர்கட்கு இப்போது 63 அகவை நடைபெறுகிறது. இவர் ஒரு பன்மொழிப்புலவர்; இயல், இசை, நாடகம், ஓவியம், சிற்பம் இன்னோரன்ன கலைத்துறைகளில் ஈடுபாடும், அறிவாற்றலும் மிக்கவர். தமது எழுத்தாற்றலால் முன்னரே பல பரிசுகள் பெற்றுள்ளார். பத்து சிறுகதைத் திரட்டுகள், ஏழு புதினங்கள், ஏழு செய்யுள் திரட்டுகள் மற்றும் பயணக் கட்டுரைகள் முதலியன இவர்தம் படைப்புகளாகும், இவர் எழுதிய "அக்கரைச் சீமையில்" என்னும் பயணக் கட்டுரை நூல் 1963ல் சாகித்திய அகாடமியின் பரிசினைப் பெற்றுள்ளது என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. ஆண்டுதோறும் பண்ணாராய்ச்சி மாநாடுகளைத் தமது சொல்லாற்றலால் சிறப்பித்து வருகின்றார்.

பரிசுபெற்ற "நமது செல்வம்" என்னும் நூல் கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட சிறந்த நூலாகும். இவர் 40 ஆண்டுகட்கு மேலாகச் சென்னை வானொலி நிலையத்தில் பணியாற்றியுள்ளார்.

நமது கழக நூலாசிரியருள் ஒருவர் என்ற முறையில் பரிசு பெற்ற நூலாசிரியர் திரு. மீ. ப. சோமு அவர்கட்குக் கழகத்தின் சார்பிலும், செந்தமிழ்ச் செல்வியின் சார்பிலும் எமது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

———

செய்திகள்

தமிழ்நூற் பதிப்பாளர்கட்கு உதவும் தமிழக அரசுக்கு நன்றி

தமிழ்நூல் வெளியீட்டுத்துறை 150 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் இயங்கிவருகிறது. சென்ற நூற்றுண்டில் ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரனுர், உ. வே. சாமிநாதையர் போன்ற ஒரு சிலரும், ரிப்பன் பிரஸ் போன்ற சில பதிப்பகங்களுமே இத் துறையில் சில சாதனைகளைச் செய்ய முடிந்தது. இந்த நூற்றுண்டில் பல்வேறு தொழில் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பினும் தமிழ்நூல் பதிப்புத்துறை மிகவும் பின்தங்கியே வந்துள்ளது. இத்துறையில் ஈடுபட்ட ஒரு சிலரும் கைப்பொருளை இழந்தார்களே தவிரப் பொருளீட்டினுரில்லை.

இவ்வாறு தமிழ் நூல்களை அழகுற அச்சிட்டு வெளியிட்டவர் களுள் குறிப்பிடத்தக்கவர், சக்தி காரியாலயத்தின் உரிமையாளர் காலம்சென்ற வை. கோவிந்தன் அவர்கள் ஆவர். இன்றுள்ள பல பதிப்பகங்கள் தோன்றுவதற்கு முன்னேடியாகத் திகழ்ந்தவர் அவர். 'சக்தி' என்ற மாத இதழை அழகுற நடத்தியவர். மேனுட்டு முறைக்கொப்பத் தமிழ்நூல்களைச் செம்மையான முறையில் வெளியிட்டவர்.

இத்தகைய அரிய பணியாற்றியவர் தம் குடும்பத்திற்குப் போதிய பொருளீட்டி வைக்கவில்லை. எனவே அவர்தம் துணைவி யார் தமிழக அரசுக்கு நிதி உதவிகேட்டு விண்ணப்பித்தார். பல தடங்கல்களுக்கிடையே தமிழகச் சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள், தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் ஆகியோர் முயற்சியால் திரு. வை. கோவிந்தன் அவர்கள் குடும்பத்துக்கு மாதம் ரூ. 250, பொருளுதவி செய்யத் தமிழக அரசு முன்வந்துள்ளது. இதனைப் பெரிதும் பாராட்டித் தமிழக அரசுக்கும் குறிப்பாக இருபெரு அமைச்சர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிரேம்.

இரா. முத்துக்குமாரசாமி,
தலைவர், தமிழ்நாடு பதிப்பாளர் சங்கம்

புலவர் சாம்பசிவனுர்க்கு முனைவர் பட்டம்

மதுரைக் காமராசர் பல்கலைக்கழக அஞ்சல்வழிக் கல்வித் தமிழ்த் துறையில் பணிபுரிந்துவரும் புலவர் ச. சாம்பசிவனுர், "நாவலர் சோம சுந்தர பாரதியாரின் தமிழ் இலக்கியப் பணி" என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆராய்ச்சிக்கு இப்போது மதுரைப் பல்கலைக் கழகம் முனைவர் (டாக்டர்) பட்டம் வழங்கியுள்ளது. இவருக்கு அகவை 55. இது காறும் 50க்கும் மேற்பட்ட நூல்களும், 300க்கு மேற்பட்ட கட்டுரை களும், பல கவிதைகளும் எழுதியுள்ளார். தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார். மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரைத் திருவள்ளுவர் கழகம், தமிழகத் தமிழ்க்கல்லூரி ஆசிரியர் மன்றம், நாவலர் பாரதியார் கல்வி அறப்பணிக்குழு ஆகிய வற்றின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளார். தமிழக அரசு, நாவலர் பாரதியாரின் நூற்றுண்டுவிழாவைக் கொண்டாடுதற்கும்,

உலகத்தமிழ் மாநாட்டின்போது நாவலர் பாரதியாரது திருவுருவச் சிலையை அமைப்பதற்கும் உறுதுணை புரிந்தவர்களில் இவரும் ஒருவர். சை. சி. நூ. ப கழக வாயிலாக இவரெழுதிய நூல்கள் நான்கு வெளிவந்துள்ளன. கழகம் நடத்திய சிற்றிலக்கிய மாநாடுகளிலும் பங்கு கொண்டு உரையாற்றியுள்ளார்.

தமிழ்ச் சான்றோர்க்குப் பாராட்டுவிழா

திண்டிவனம் தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பில், 11—9—'83ல், திண்டிவனம் முஸ்லீம் உயர் தொடக்கப் பள்ளியில் திரு. நடராசன் அவர்கள் தலைமையில் தமிழ்ச் சான்றோர்க்கு விருது வழங்கு விழா நடைபெற்றது. புலவர் நா. நல்லியக்கோடன், க.மு., கல். இ. வரவேற்புரை நிகழ்த்தினர். இவ் விழாவில் புலவர் தி. நா. அறிவுஒளி, க. மு. கல். இ. அவர்களுக்குப் 'புலவர்கோ' என்னும் விருதும், புலவரேறு அரிமதி தென்னவன் அவர்கட்கு 'உணர்ச்சிக் கவிஞர்' என்னும் விருதும், முதுபெரும் புலவர் கோபாலகிருட்டிணன், க. மு. அவர்கட்கு "நகைச்சுவை நாவலர்" என்னும் விருதும் அறிஞர் பெருமக்களால் வழங்கப்பட்டுப் பொன்னடை போர்த்திச் சிறப்பிக்கப் பட்டது. புலவர் பெருமக்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழ்த் தொண்டர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் 85ஆம் ஆண்டு பிறந்தநாள்விழா

தமிழ் மொழி—மக்கள்—நாடு நலம்பெற தமிழ் மருத்துவம் சிறக்க 65 ஆண்டுகளாகத் தொண்டாற்றிவரும் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் 85ஆவது பிறந்தநாள்விழா அக்டோபர் 8 முதல் நவம்பர் 14ஆம் நாள் முடிய 40 நாள்கள் தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களில் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

மறை. திருநாவுக்கரசர் மறைவுக்கு இரங்கல்

முதிய நண்பர் மறை. திருநாவுக்கரசு காலமான செய்தி அவர்களை அறிந்தவர்களுக்கு, அவர்களுடைய சொற்பொழிவைக் கேட்டவர் களுக்கு, அவர்களுடைய மாணக்கர்களுக்குப் பேரிழப்பாகும். குழந்தை உள்ளமும், நிரம்பிய தமிழ்ப் புலமையும், பிறர் நன்மை காணுவதே தமது பார்வைப் பயனாகவும் கருதி வாழ்ந்து மறைந்த பண்பாட்டாளர். அவர் மறைந்துவிட்டார். ஆனல் பல்லாயிர மக்களின் மனத்தில் வாழ்கிருர்.

டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம்,
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

(சிலம்பு ரு௮, ௩௭ ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10	00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர்)	5	00
,, தி. வை. சங்கரக் குமாரு அவர்கள், நெல்லை (தமது மணிவிழா நன்கொடை)	11	00
,, A. T. A. ஈஸ்வர் அவர்கள்	5	00
,, விசாக நம்பி ,,	5	00
,, முத்துலிங்கா ரெட்டியார் அவர்கள்	5	00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம்	5	00

மதிப்புரை

செம்மை தரும் சிந்தனைகள்

[ஆசிரியர்: எஸ். இராஜு செட்டியார், பி.ஏ.,பி.எல்., கம்பன் பதிப்பகம், 16, டி. பி. கோயில் வீதி, திருவல்லிக்கேணி, சென்னை-5. விலை: ரூ. 7-00]

தனிமனிதரிடம் — குடும்பத்திடம் — குழுகாயத்திடம் — நாட்டினிடம் நாம் அன்றாடம் எத்தனையோ குறைபாடுகளைக் காண்கிறோம்; அவை களையப்படவேண்டும் என்பதையும் உணர்கிறோம்; அவை பற்றிப் பிறரிடம் பேசுகிறோம்; கேட்போரும் அவற்றை ஒப்புகின்றனர். ஆனால், இங்ஙனம் உணர்வோரும், பேசுவோரும் அவற்றைக் கேட்போரும் தம்மிடம் காணப்படும் குறைபாடுகளை உணர்ந்து தம்மைத் திருத்திக்கொள்கின்றனரா என்றால், இல்லை; எனவேதான் நாட்டின் பலதுறைகளிலும் அறியாமை, ஒழுங்கீனம், ஒழுக்கமின்மை, கொலை-களவு-காமம் கட்குடி-பொய்-வஞ்சகம்-சூது-கள்ளச் சந்தை-கொள்ளையடித்தல் இன்னபிற தீமைகள் மலிந்து காணப்படுகின்றன. இவைபற்றிய செய்திகளைத் தாங்கி வெளிவராத செய்தித் தாள்களே இல்லை எனலாம்.

இத்தகைய சீர்கேடுகளைக் களைவது எப்படி? களைய முன்வருவார் எவர்?—இந்த வினாக்களுக்கு விடை கூறு முகத்தான் தோன்றியதே "செம்மை தரும் சிந்தனைகள்" என்னும் இந்நூல். இதனை இந் நூலாசிரியரே தமது முன்னுரையில் கூறுகிறார். அனைத்துக்கும் அடிப்படையாகக் கல்லாமையினையும் அறியாமையினையும் வைக்கிறார். அடுத்து 20 தலைப்புகளில் தமது கருத்துகளை வலியுறுத்துகிறார். இதற்குப் பெரும்பாலும் திருக்குறட் கருத்துகளையும், எஞ்சியவற்றுள் சங்க இலக்கியம் மேனாட்டு இலக்கியம் ஆகியவற்றையும் துணைகொள்கிறார். "தலைவர்களும் மக்களும்" என்ற தலைப்பில் வரும் கட்டுரையின் இறுதியில், "மக்களிடம் சொந்த புத்தியும், சிந்திக்கும் திறமும், பண்பும் பகுத்தறிவும் ஏற்படுகிற வரையில் மக்கள் தலைவர்களைக் கெடுத்து நிற்பர்; அந்தத் தலைவர்களும் மக்களைக் கெடுத்து நிற்பர்." என்று கூறுகிறார். இன்னும் இதுபோன்ற அரிய கருத்துகளை—பட்டறிவு உண்மைகளை நடுநிலை நின்று கூறுகிறார். அவற்றை விரிக்கின் பெருகும், சுருங்கச் சொன்னால் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய அரிய நூல் எனில், மிகையன்று.

தமிழினமே...!

[ஆசிரியர்: தமிழ்ப் பாவலன் தரங்கைப் பன்னீர் செல்வன், கயற்கண்ணி பதிப்பகம், முதினை அஞ்சல். தெ. ஆ. ரூ. 1-00]

மொழிப்பற்று—இனப்பற்று—நாட்டுப்பற்று ஆகியவற்றை அடிப்படையாக வைத்து 29 தலைப்புகளில், உணர்ச்சியூட்டும் வகையில் இவ்வாசிரியர் எழுதியுள்ள கவிதைகளின் தொகுப்பே இச்சிறு வெளியீடு. தமிழர் தளபதி திரு. கி. வீரமணி அவர்களின் மதிப்புரையுடன் கூடிய இந்நூலுக்கு வேறு மதிப்புரை தேவையில்லை என்றே கருதுகிறோம். பாவலரின் முயற்சி பாராட்டத்தக்கதே.

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக
80, பிரகாசம், சாலை, சென்னை, அப்பர் அச்சகத்தில்
திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி. லிப்.

கழகப் புதிய வெளியீடுகள்

தமிழ் (சொற்பொருள் வரலாறு)

ஆசிரியர்: கழக இலக்கியச்செம்மல், புலவர் இரா. இளங்குமரன்

தமிழ்மொழி—தமிழ் இனம்—தமிழ்நாடு என்னும் முப்பொருள் பற்றியதோர் ஆராய்ச்சி நூலாகத் திகழும் இந் நூலில் மொழி ஆராய்ச்சி—இலக்கிய ஆராய்ச்சி—இலக்கண ஆராய்ச்சி ஆகியன சுருக்கமாகவும், விளக்கமாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. 'தமிழ்' என்னும் சொல் தோன்றிய வரலாறு கூறும் இந் நூல் ஆராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயன்படக் கூடியது. ரூ. 7 50

திருவாசகத் தேனமுதம்

ஆசிரியர்: சட்டத்துறை அறிஞர் மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

சைவசமய நூல்களுள், படிப்பவர் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குமளவிற்குப் பத்தச்சுவை நனிசொட்டச் சொட்ட, மாணிக்கவாசகரால் பாடப்பட்டது திருவாசகம் திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார். அத்தகைய வாசகங்களை அடுக்கடுக்காக எடுத்துக்கூறித் தக்க மேற்கோள்களுடன் விளக்கம் தருகிறார் இந் நூலாசிரியர் பக்கங்கள் 350 ரூ. 22 00

பாலாற்று வளம்

ஆசிரியர்: புலவர்கோ. தி. நா. அறிவு ஒளி, எம்.ஏ., எம்.எட்.

ஆறுகளை அடிப்படையாக வைத்து வளர்ந்துள்ள நாகரிகங்கள் பல. அத்தகைய ஆறுகளின் வளத்தினைக் கூறுமுகத்தான், அவ்வாறுகள் பாயும் மாவட்டங்களின் வரலாறுகளும் கூறப்படுகின்றன. இவ்வகையில் முன்னர் கெடிலம், காவிரி, வையை, பொருநை ஆறுகளின் வளம் கூறும் நூல்கள் வெளிவந்தன. இப்போது 'பாலாற்று வளம்' வெளிவருகிறது. இது செங்கற்பட்டு மாவட்ட வரலாறாகவும் அமைந்துள்ளது. வரலாறு முதுவோர்க்கு இந் நூல் நன்கு பயன்படும் ரூ. 12 00

கழக நிலையங்களில் கிடைக்கும்
பிற பதிப்பாளர்களின் புதிய வெளியீடுகள்

அன்னை மொழியும் ஆட்சித்துறையும் —தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை	5	00
புதிய ஆத்திசூடி—புலவர் இரா. முருகையன்	4	90
மூன்று சக்கரங்கள் - கே. ஏ. அப்பாஸ்	7	90
பாரதி ஒரு வாழ்நெறி தி. ச. ராஜி	12	50
திருமாலின் திருஅவதாரங்கள்—மாருதிதாசன், எம்.ஏ.	11	00
காஞ்சி காமாட்சி—அ. அறிவொளி	9	00
ரத்தம் சரணம் கச்சாமி—கவிஞர் மணிமொழி	4	50
சேதுபந்தனம்—கௌதம நீலாம்பரன்	15	00
இடைவெளிகள் தொடர்கின்றன—வாசந்தி	9	00
நெஞ்சில் நிறைந்த முகம் தாமரை செந்தூர்பாண்டி	9	00
அன்பு வேணுமா அன்பு—ரா. கணபதி	17	20
பூமியைச் சுமக்கும் வானங்கள் இ. முத்துராமலிங்கம்	6	50
பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி - ராஜம் கிருஷ்ணன்	32	00
நிலாக்காலத்து மயக்கங்கள்—ஆர். ஈ. சந்திரசேகர்	7	50
தினம் ஒரு குறள்—பி. சி. கணேசன்	15	00
சூரிய வம்சம்—சா. கந்தசாமி	17	00
Kamaraj and his Secrets of Success —Palayam M. Balasundram	19	50

அப்பர் அச்சகம், சென்னை-108.